# நம் வழி வேளாண்மை

பருவம் 26 ஜூலை – செப்டம்பர் 2016 இதழ் 2



கால்நடைகளுக்கு மூலிகை மசாலா உருண்டை தயார் செய்யும் பயிற்சி

## இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

# நம்வழி வேளாண்மை

பருவம் 26 ஜூலை – செப்டம்பர் 2016 இதழ் 2

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**


## நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

**நம்வழி வேளாண்மை குழுமம்**
**பிற மொழி இதழ்கள்**

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே


**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,
**Honey Bee,**
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org


## கடமையில் மலர்ந்த ஞானம்

கௌசிகன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து தவம் செய்து கொண்டிருந்தான். அப்பொழுது மரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு கொக்கு அவன் தலைமேல் எச்சமிட்டது. கௌசிகன் கொக்கை கோபத்துடன் பார்க்க கொக்கு எரிந்து சாம்பலானது. கொக்குக்கு நேர்ந்த கதியை எண்ணி வருந்திய போதிலும், அவனுக்குத் தன் தவ வலிமையில் கர்வம் உண்டானது. பிச்சை எடுத்து உண்ண அவன் பக்கத்து நகரத்திற்குச் சென்றான். அங்கு ஒரு வீட்டில் யாசித்தான். குடும்பத்தலைவி கணவனைக் கவனிப்பதில் ஈடுபட்டிருந்ததால் கௌசிகனுக்க உணவு அளிக்கச் சற்றுத் தாமதம் ஆயிற்று. அவள் அவனுக்கு உணவு அளிக்கும் பொழுது அவன் அவளைக் கோபமாக பார்த்தான். அவள் புன்னகைத்து ''கொக்கெனெநினைத்தாயோ கொங்கணவா?'' காட்டில் நடந்தது இவளுக்கு எப்படித் தெரியவந்தது என்று கௌசிகன் புரியாமல் குழம்பினான். ''கணவனைப் பேணி அவனுடைய தேவைகளைக் கவனிப்பது தான் மனைவியின் முதல் கடமை. இந்த கடமையை பய பக்தியுடன் செய்து வந்ததால் தனக்கு கொக்கு எரிந்த சம்பவம் தெரிய வந்தது. மனிதனின் கடமைகளை உனக்கு நன்கு போதிக்க மதிலாபுரியில் உள்ள ஞானியிடம் நீ செல்ல வேண்டும்'' என்று கூறினாள். அதன் படியே கௌசிகன் ஞானியைத் தேடிச் சென்றான். ஒரு கசாப்புக்கடையில் இறைச்சி விற்றுக் கொண்டிருந்தவனைக் காட்டி, ''இவன்தான் ஞானி'' என்று மக்கள் கூறினார்கள். கௌசிகனுக்கு வியப்பு உண்டாயிற்று. வெறுப்புடன் அவன் சற்று தூரத்தில் நின்றான். ஞானி அவனிடம் ஓடி வந்து ''வாருங்கள் ஐயா, அந்த மகா பதிவிரதையான பெண் உங்களை என்னிடம் அனுப்பினாளா?'' இதைக் கேட்ட கௌசிகன் ஆச்சிரியம் அடைந்தான். ஞானி அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். வீட்டில் அவன் பெற்றோர்களுக்கு வேண்டிய பணிவிடைகளை முதலில் செய்தான். பிறகு மற்ற காரியங்களைச் செய்து முடித்துக் கௌசிகனிடம் வந்து ''ஒரு மனிதனின் முதல் கடமை பெற்ற கடனை அடைப்பதே, அவனுடைய பெற்றோர்கள் அவனைப் பேணிக்காத்து வளர்த்தது அவன் பட்ட முதல் கடன். வயதான பெற்றோர்களைக் கவனித்து அவர்களுடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வது அவன் முதல் கடமை. அவன் பிற்காலத்திற்காகச் சேமிப்பது அவன் குழந்தைகளைப் பேணி வளர்ப்பது ஆகும். அவர்கள் அவனை வயதான காலத்தில் காப்பாற்றுவார்கள். தன் வருமானத்தில் ஒரு பங்கை மனிதன் தானம் தருமத்தில் செலவிட வேண்டும்''. இப்படியாக ஞானி கௌசிகனுக்கு கடமையை ஆற்றுவதையும் அதன் பலனையும் பற்றி விளக்கினான்.

நன்றி : மகரிஷிகள் வரலாறு

# நெல்லுக்கு ''கெட்டிநாட்டு'' விதை நேர்த்தி



கேரளா மாநிலத்தில் வயநாடு பகுதி அம்பலவயல் கிராமத்தில் அஜித்தாமஸ் (45 வயது) என்ற விவசாயி நெல் விதைப்பில் ''கெட்டிநாட்டி'' என்ற முறையை உருவாக்கியுள்ளார். இவர் பியூசி வரை படித்துள்ளார். 2 ஏக்கர் நிலம் உள்ளது. நெல்லில் நடவு செலவை குறைக்கவும், வயதைக் குறைக்கவும், நீர் பற்றாக்குறையை சமாளிக்கவும் இந்த முறை உருவாக்கியதாகக் கூறுகிறார். சிலர் மண் உருண்டைகளில் விதை நெல்லை கலந்து விதைக்கின்றனர். இம்முறையை ஜப்பான் நாட்டு இயற்கை வேளாண்மைத் தந்தை எனக் கூறப்படும் ''புக்கோக்கா'' என்பவர் உருவாக்கியதாகக் கூறுகின்றனர். ஆனால் அஜிதாமஸின் முறை வேறுபட்டதாகும். இம்முறையைப் பயன்படுத்தி கேரளா மாநிலத்தில் சுமார் 150 விவசாயிகள் கடைபிடிப்பதாகக் கூறுகின்றார்.

### கெட்டி நாட்டி முறை

பசு மாட்டு சாணம் 200 கிலோ, பஞ்சகவ்யா 2 லிட்டர், இத்துடன் மா இலை, கிளிரிசிடியா இலை, தும்பை, துளசி, வேப்பிலை 10 கிலோ இடித்து சேர்க்க வேண்டும். இதனை 2 வாரம் புளிக்க விட வேண்டும். பின்னர் ஒன்றாகப் பிசைந்த கலவையை கெட்டி நாட்டு முறையில் நெல் விதையும் சேர்க்க வேண்டும்.

வீடுகளில் / அலுவலகங்களில் நீர்படாமல், தூசிபடாமல் இருக்கப் பயன்படுத்தப்படும். ரப்பர் மேட் எடுத்துக் கொள்ள வேண்டும். சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் ரப்பர் மேட்டில் துளைகள் இருக்கும். இந்தத்துளைகள்1 அங்குல விட்டமுள்ளதாகக் காணப்படும். இரப்பர் மேட்டின் கனம் 1 செ.மீ ஆகும். இதன் மேல் அலுமினிய தகட்டில் (6' X 1') (இதே இடைவெளியில் நெல் மணிகள் நுழையும் அளவு துளைகள் இடப்பட்டது) நெல்லை பரப்ப வேண்டும்.



முதலில் இரப்பர் மேட்டை கீழே வைத்து அதன் மேல் சாணிக்கலவையை முழுதும் நிரப்பி விட வேண்டும். இதன் மேல் அலுமினியத்தட்டை இட்டு நெல்லை பரப்பினால் ஒவ்வொரு துளைக்கும் 1–2 நெல்கள் சென்று விடும். இவை சாணிக்கலவையில் பதிந்து விடும். பின்னர் இரப்பர் சீட்டை வெளியே எடுத்தால் சாணவில்லைகள் வரும். இவற்றை ஓரிடத்தில் குவித்து ஒரு பாலிதீன் சீட்டை, அல்லது தார்பாயை வைத்து மூடி விட வேண்டும். இதில் 5 நாளில் முளை முண்டிவிடும். இந்த முளை முண்டிய சாணி வில்லைகளை விதைக்கலப்பை கொண்டு நிலத்தில் விதைத்து விடலாம். ஒரு வில்லைக்கு 2 நாற்றங்கால் வரை முளைக்கும். இதற்கு விதை அளவு ஏக்கருக்கு 2 1/2 கிலோ அளவு இருந்தாலே போதுமானது. சாதாரணமாக விதைக்க 30–40 கிலோ வரை விதை நெல் விதைப்பர். இம்முறையில விதைக்கும் கூலியாட்கள் ஏக்கருக்கு 2 நபர்கள் தான். சாதாரண முறையில் 20 நபர்கள் நடுவதற்கு தேவைப்படுவர்.

இம்முறையில் நெல் விரைவில் அறுவடைக்கு தயாராகும். அதாவது 15 நாட்கள் குறையும். இவர் 90 நாள் வயதுடைய

'தொன்னூற்றந்தோண்டி' என்ற சிகப்பு நிற நாட்டு நெல்லை பயிரிட்டு வருகிறார். இது தவிர 'ஜோதி' என்ற 10 நாளுடைய இரகத்தையும் பயிர் செய்கிறார்.

இவர் இரப்பர் மரத்தில் பால் எடுப்பதற்கு மரத்தில் பால் வடிய சிறு துளை போடவும் ஒரு கருவியை வடிவமைத்து இரப்பர் நிறுவனத்தின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

இவருடைய கெட்டி நாட்டி முறைக்கு நபார்டு வங்கியின் ''விஞ்ஞானி விவசாயி'' விருதை 2008 ல் பெற்றுள்ளார்.

அஜிதாமஸ்,
குன்னல், மலிகா
அம்பலவயல்,வயநாடு
கேரளா
செல் : 9497 568460

## செந்திலின் கடலை பிரித்தெடுக்கும் கருவி

மதுரை மாவட்டம் மேலூர் தாலுகா, சிவகங்கை ரோட்டில் செந்தில் (36 வயது) தாண்டவர் இஞ்சினியரிங் ஓர்க்ஸ் லேத் பட்டறை நடத்தி வருகிறார். இவர் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளார். அறுவடை செய்த நிலக்கடலைச் செடியிலிருந்து நிலக்கடலையைத் தனியாகப் பிரித்தெடுக்கும் மிகவும் எளிதான கருவி ஒன்றைக் உருவாக்கியுள்ளார்.



இவருடைய தாண்டவர் லேத் பட்டறையில் 6 தொழிலாளிகளுடன் ஏதாவது புதியதாக கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல விதமான கருவிகளை உருவாக்கியுள்ளார். இவற்றில் விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய விலை குறைந்த கருவிகளான கடலைச் செடியிலிருந்து நிலக்கடலையை பிரித்தெடுக்கும் கருவி, தேங்காய் நெற்றை சரிபாதியாக வெட்டும் கருவி மற்றும் அனைவருக்கும் சவாலான மின் கம்பத்தில் ஏறி வேலை செய்யும் கருவி போன்றவையாகும்.





நிலக்கடலையைப் பிரித்தெடுக்கும் கருவிக்கு 30'' உயரமும், 24'' அகலமும் உள்ள மிகவும் உறுதியான ''எல்'' வடிவத்திலான இரும்புப் பட்டைகளை இணைத்து மேசை வடிவிலான அமைப்பை அமைத்துள்ளார். சரியாக அதன் நடுப்பக்கத்தில் 2 அடி நீளமுள்ள உறுதியான

உருண்டை அமைப்பிலான கம்பி ஒன்றை வைத்து அதன் நடுவில் சுழலும் படியான பழைய சைக்கிள் ரிம் ஒன்றைப் பொருத்தி பின்னர் அதை ஒரு ''வி'' பெல்ட்டுடன் 1/4 ஹெச்பி மோட்டாருடன் இணைத்துள்ளார். மோட்டார் ஓடும் போது பெல்ட் மூலம் சைக்கிள் ரிம் மித வேகமாகச் சுழலும். அப்போது அறுவடை செய்த வேருடன் கூடிய நிலக்கடலை செடிகளை கைகளில் கொத்தாக எடுத்துக் கொண்டு ரிம்மின் கம்பிகள் வழியேச் செலுத்தும் போது நிலக்கடலைகள் தனித்தனியாகக் கீழே சிதறி விழும். அவ்வாறு விழும் நிலக்கடலை வேகமாக வெளியே சிதறாவண்ணம் தடுக்கும் விதமாக ஓடும் ரிம்மின் இரண்டு பக்கமும் சிறிய பட்டை வடிவிலானத் தடுப்பு போன்று அமைத்துள்ளார். ஓர் ஏக்கர் நிலக்கடலையைத் தனியாகப் பிரித்தெடுக்கத் தினமும் நாள் 1 க்கு 12– 13 நபர்கள் வரை தேவைப்படும். ஆனால் இந்த மிஷின் மூலம் நிலக்கடலையைப் பிரித்தெடுப்பதற்கு தினமும் 3 பேர் 3 மணிநேரம் மட்டும் செலவழித்தால் போதுமானது. 1/4 ஹெச்பி மோட்டார் மட்டும் பொருத்தியதால் மின்சாரச் செலவும் மிகவும் குறைவு இவ்வாறு அவர் தயாரித்த மெஷின்களை தமிழகம் முழுவதும் விற்று வருகிறார்.

விவசாயிகளுக்கு ஒன்றின் விலை ரூ. 8,000 வீதம் சுமார் 30 கருவிகளை இது வரை விற்றுள்ளார்.

**தேங்காய் நெற்றை வெட்டும் கருவி**



மதுரை மாவட்டம் மேலுரைச் சேர்ந்த செந்தில் மேலும் ஒரு புதிய கருவியைக் கண்டுபிடித்து விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளார். தரையிலிருந்து 5 அடி உயரமும் 20 அங்குல அகலமும் கொண்ட இரும்புச் சட்டம் செய்துள்ளார். பின்னர் இதன் நடுவில் 5 அங்குலம் நீளம் கொண்ட 2 இரும்புச் சட்டத்தை வளைத்து தேங்காய் வைக்கக் கூடிய வகையில் ஏதுவாக அமைத்துள்ளார். இந்த இரும்பு பட்டை போன்ற அமைப்புக்கு நடுவில் அடி பம்பு இயக்குவது போன்ற நீளமான இரும்பு கம்பி செய்து அதன் நடுவில் 4 அடி நீளம் கொண்ட இரும்புச்சட்டத்தை வளைத்து அதை வெட்டும் பெரிய அரிவாள் போன்று அமைத்தார். பின்னர் தேங்காயை மிஷினின் நடுப்பக்க வளைந்த பட்டையில் வைத்து பின்னர் அடி பம்பு போன்ற நீளமான இரும்புக்கம்பியை மேலே தூக்கி வேகமாக கீழே இறக்கினால் தேய்காயானது சரியாக இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு கீழே விழும். பின்னர் இதனைத் தேவைக்கேற்ப உபயோகப்படுத்தலாம். சாதாரணமாக 8 மணி நேரம் செய்யக்கூடிய இந்த வேலையை சுமார் 3 லிருந்து 4 மணி நேரத்திற்குள் முடித்து விடலாம்.

ஒரு கருவியின் விலை ரூ. 7,000 ம் வீதம் சுமார் 25 கருவிகளை தமிழகம் முழுவதும் உள்ள விவசாயி களுக்கு விற்றுள்ளார். விவசாயிகள் மத்தியில் இந்த கருவிகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது என்று கூறுகிறார்.

எஸ். செந்தில்
த/பெ. சுப்பிரமணியன்
தாண்டவன் லேத் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ்
சிவகங்கை ரோடு, மேலூர், மதுரை மாவட்டம்
செல்: 9944437098

## சிக்கன கரும்பு கரணை நடவு முறை

சிவகங்கை மாவட்டம், ஒக்கூர் திருமலையில் திரு. அழகுசுந்தரம் (30) வசித்து வருகிறார். இவர் +2 வரை படித்துள்ளார். இந்த இளைஞர் சிறு வயதில் பெற்றோர் இறந்தவுடன் ஐந்து ஏக்கர் வயலில் தன்னால் இயன்றளவு விவசாயம் செய்து தங்கையை கரை சேர்த்தார். தொழில்நுட்ப கல்வி, மதுரை ஆவினில் சினை ஊசி பயிற்சி என பல சான்றிதழ் படிப்புகளை படித்தார். கரும்பு சாகுபடியில் இவர் இரண்டு உத்திகளை உருவாக்கியுள்ளார். கரும்பு விதைப்பெட்டி மூலம் நாற்று உருவாக்குதல், சித்த மருந்தை நிரப்பி நாற்றை உருவாக்குதல்.

**கரும்பு விதைப் பெட்டி**

இரண்டு அடி உயரம், இரண்டடி நீளம், ஒன்றரை அடி அகலம் கொண்ட பிளாஸ்டிக் பெட்டியில் ஐந்து அடுக்கு தட்டுகளை வைத்துள்ளார். ஒவ்வொரு தட்டிலும் 150 கரும்பு கரணைகள் என மொத்தம் 750 கரணைகளை அடுக்கி அவற்றின் மீது தென்னை நார்க்கழிவுகளை பரப்பி ஐந்து நாட்கள் நிழலில் உலர வைக்கிறார். ஐந்து நாட்களுக்குப் பிறகு விதைகள் நல்ல முறையில் முளைத்து காணப்படும்.

பிளாஸ்டிக் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்ட தட்டுக்களில் 5 நாட்களில் முளைவிட்டிருக்கும். இதனை அப்படியே நிலத்தில் நடவு செய்யலாம். அல்லது 7 நாட்கள் வரை வைத்திருந்தும் நடவு செய்யலாம். கரும்பு விதைப் பெட்டியின் செலவு ரூ. 500 ஆகும். ஆனால் பழைய பெட்டிகள் மார்க்கெட்டில் ரூ.100 க்கு வாங்கலாம்.

**கரும்பு விதை பெட்டியின் சிறப்பம்சங்கள்**

ஓர் ஏக்கருக்கு ஒரு டன் கரும்பிலிருந்து எடுக்கப்படும் குருத்து பருக்களே போதுமானது. இதை 2 சக்கர வாகனத்தில் எடுத்துச் செல்ல ஏதுவாக இருக்கும். வேலையாட்கள் செலவு குறைவு. முளைப்புதிறன் நன்றாக இருப்பதால் சோடையாவது இல்லை. இந்த முறையில் மஞ்சள் பயிருக்கும் நாற்றங்கால் அமைத்து 35–40 நாட்களில் நடவு செய்யலாம்.

**கரையானுக்கு**

வெட்டப்பட்ட கரணைகளுக்கு துளையிட்டு அதில் வேப்பம்பிண்ணாக்கு தூள் (2 கிராம்) பசுவெண்ணெய் 5 கிராம், கலந்து உள்ளே நிரப்ப வேண்டும். இந்த முறையில் கரையான் தாக்குதல் ஏற்படாது. வளர்ந்த பயிரில் குருத்துப்பூச்சிகளும் உண்டாகாது.

**மஞ்சளுக்கு நாற்று பாவி நடுதல்**



மஞ்சள் விதை கிழங்கினை விவசாயிகள் நிலத்திலேயே நடவு செய்கின்றனர். இதற்கு நீர் விட்டு முளைக்க 1 மாதம் எடுக்கும். இந்த காலத்தை குறைத்து 2 வாரங்களில் நாற்று உருவாக்கும் பிளாஸ்டிக் தட்டில் தென்னை நார்க்கழிவு, உரம் சேர்த்து கிழங்கை ஊன்றி நீர் விடுகிறார். இவ்வாறு நாற்றுவிட்டு மஞ்சளை நடவு செய்தால் காலமும் குறையும், நிலத்தில் நீர் பாய்ச்சும் செலவையும் குறைக்கலாம். முதலில் கரும்பில் கரணைகளை நடவு செய்ய கரும்பு நாற்று பெட்டி தயாரித்து (தக்காளி கொண்டு செல்லும் பிளாஸ்டிக் பெட்டியில் இரும்பு வலை வைத்து 3–4 அடுக்கில்) கரும்பு நாற்றுக்களை உருவாக்கினேன். இதனைப் பார்த்து சில விவசாயிகள் இதை மஞ்சளுக்கு எங்ஙனம் கடைபிடிப்பது என்று கேட்டனர். இதை ஈரோடு மாவட்டம் கொடுமுடி பகுதியில் செயல்விளக்கம் செய்து காட்டினேன். விவசாயிகள் பாராட்டினர்.

ஆ. அழகு சுந்தரம்
த/பெ. எ.எல். ஆறுமுகம்
திருமலை அஞ்சல்
சிவகங்கை மாவட்டம் – 630 552
செல் : 9585874197

## வன வேளாண்மை

கேரளாவில் கொடுங்கல்லூர் பகுதியில் திரு. சந்திரன் மாஸ்டர் என்ற விவசாயி (75) வசித்து வருகிறார். இவர் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின் விவசாயத்தில் முழு ஈடுபாடுடன் செயல்பட்டு வருகிறார். இவர் கேரள தேசத்து பாரம்பரிய குள்ள ரக வெச்சூர், காசரகோடு போன்ற நாட்டு இனங்களை பாதுகாப்பதிலும் ஆர்வம் காட்டினார். இவரைப்பற்றிய குறிப்புகள் நம்வழிவேளாண்மையில் (ஏப்ரல்– ஜூன்– 2012 ) பருவம் 21 இதழ் 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இயற்கை முந்திரி சாகுபடி**

இவர் முந்திரி மரங்களுக்கு நட்ட முதலாண்டு மட்டும் குப்பை, பஞ்சகவ்யா, அமிர்தக்கரைசல் தெளித்து வந்துள்ளார். பின்னர் உரம், மருந்து தெளிக்காமல் விட்டு விட்டார். இப்பகுதியில் மணல் சார்ந்த படுகை மண் முந்திரிக்கு ஏற்றதாக உள்ளது. 200 முந்திரி மரங்கள் இவர் பண்ணையில் இருக்கின்றன. இதனை வருடத்திற்கு ரூ. 35,000க்கு ஒப்பந்த அடிப்படையில் அறுவடை செய்ய விட்டு விடுகிறார். மரங்களைச்சுற்றி இலைதழைகளை வைத்து 11/2 அடி உயரத்தில் மூடாக்கு செய்து வருகிறார்.

**தென்னை சாகுபடி**

இவரிடமுள்ள வெஸ்ட்கோஸ் டால் என்ற நெட்டை ரகம், மலேசியன் பச்சைகுட்டை மரம், இவர் உருவாக்கிய

குட்டை நெட்டை மரம் போன்ற இரகங்களிலிருந்து வருடத்திற்கு 8–10 தடவை காய்களை அறுவடை செய்கிறார். வருடத்திற்கு மரத்திலிருந்து 150–200 காய்கள் கிடைப்பதாகக் கூறுகிறார்.



இவர் மேற்படி தென்னங்கன்றுகளை உருவாக்கி நண்பர்களுக்கு கொடுத்து வருகிறார். இவர் மண்டியா இரகம், உள்ளூர் ரகம். (DXT) சேர்த்து இனப்பெருக்கம் செய்து உண்டாக்கிய இரகம் சுமார் 10–12 அடி வரை தான் உயரமாகப் போகும். இதனை கடந்த 8 ஆண்டுகளில் 200 கன்றுகள் உருவாக்கி விவசாயிகளுக்கு கொடுத்ததில் நல்ல பலன் கிடைத்ததாகக் கூறுகின்றனர். நெற்று பெரிய சைஸ், பருப்பும், நீரும் அதிகமாக இருக்கும். இவரிடம் சவக்காடம்பச்சை என்ற வேர் அழுகல் நோய் (Root wilt disease) தாக்காத இரகத்தை குருவாயூர் பகுதியிலிருந்து எடுத்து வந்து பாதுகாத்து வருகிறார்.

**மூங்கில் இரகங்கள்**



தனது தோட்டத்தில் 30க்கும் மேற்பட்ட மூங்கில் இரகங்கள் வைத்துள்ளார். இந்த மூங்கில்களை கிலோ ரூ. 4.50க்கு வெட்டி எடுத்து கொள்ள ஹிந்துஸ்தான் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்துள்ளார்.

**மாட்டுக்கோமியக்குளியல்**

வாரத்திற்கு ஒரு முறை நாட்டு பசு மாட்டு கோமியத்தை உடம்பில் பூசி ஒரு மணி நேரத்திற்கு பிறகு சுடுநீர் வைத்து குளித்து விடுகிறார்.

**மாட்டுக் கோமியத்தை கண், காது, நாசியில் விடல்**

நித்தமும் காலை மாட்டுக் கோமியத்தை சுமார். 100 மி.லி அளவு குடித்து விடுகிறார். பின்னர் இதனையே காலையில் கண், காது, நாசியில் 2 சொட்டு விடுகிறார். இதனால் இவருக்கு காய்ச்சல், சளி, சர்க்கரை போன்ற தொல்லைகள் எதுவும் வராமலிருப்பதாகக் கூறுகிறார்.

Chandran Master
Nambiyandra House
P. Vembalur P.O
Thrissur District
Kerala - 680671
தொலைபேசி - 0480-2850483, 9446310483

## கதிராமங்கலம் ஸ்ரீராமனின் நெல் சாகுபடி

திரு. ஸ்ரீராம் (43) நாகப்பட்டிணம் மாவட்டம் குத்தாலம் வட்டம் கதிராமங்கலத்தில் வசித்து வருகிறார். இவர் வணிகவியல் பட்டம் படித்துள்ளார். இவரது மனைவி தபால் துறையில் பணியாற்றுகிறார். இவர்களுக்கு இரண்டு மகன்கள். ஒருவர் 5ம் வகுப்பும் மற்றொருவர் 2ம் வகுப்பும் படித்து வருகின்றனர். இவர் 83 ஏக்கரில் இயற்கை வழியில் விவசாயம் செய்து வருகிறார். இவரது பண்ணை இயற்கை வழி பண்ணை என்று போற்றப்படுகிறது. இவர் தனது பண்ணையில் பல பாரம்பரிய நெல் ரகங்களை பயிரிட்டு வருகிறார்.

இவர் ஆரம்பத்தில் தனது படிப்பை முடித்து விட்டு தனியார் நிறுவனத்தில் கணக்காளாராக பணிபுரிந்து வந்தார். இவரது தந்தை விவசாயத்தை கவனித்து வந்தார். இவரது சகோதரர்கள் இருவர் வெளிநாட்டில் பணிபுரிந்து வருகின்றனர். இவருக்கு விவசாயத்தில் உள்ள ஈடுபாட்டினால் தனது கணக்காளர் பணியை துறந்து விட்டு விவசாயத்தில் முழுமையாக இறங்கினார். 1980 வருடங்களில் கடன் ஏதும் இல்லாமல் விவசாயம் செய்து வந்தனர். அதன் பின்பு விவசாய வேலைகள் செய்ய ஆள் தட்டுபாட்டின் காரணமாக டிராக்டர், களை எடுக்கும் கருவி, நடவு

இயந்திரம் போன்ற இயந்திரங்களை வாங்கி விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இதன் காரணமாக அதிக கடன் வந்து சேர்ந்தது. 2008, 2009ம் ஆண்டுகளில் இயந்திரங்களின் பயன்பாடு, அதிக இரசாயன உரங்கள் பூச்சி மருந்துகளின் பயன்பாடுகளின் காரணமாக அதிக கடனாகி போனது. அதன் பின்பு வெளிநாட்டில் உள்ள இவரது சகோதரர்கள் கடனை திருப்பி செலுத்த உதவி செய்தார்கள். இதன் பின்பு இவர் இயற்கை விவசாய முறையில் விவசாயம் செய்ய எண்ணினார். அதற்காக இவர் முதலில் இயற்கை விவசாய விஞ்ஞானி நம்மாழ்வாரை சந்தித்தார். அவரிடம் இயற்கை விவசாயம் செய்வது எப்படி என்று கேட்டார். அதற்கு அவர் இயற்கை விவசாய முறையை தான் சொல்வதை விட இயற்கை விவசாயம் செய்து கொண்டிருக்கும் விவசாயிகளை பார்த்து பின்பு எது சிறந்த முறை என்று ஆராய்ந்து செய்வது நல்லது என்று கூறினார். அவரது அறிவுரையின்படி இயற்கை விவசாயம் செய்யும் நபர்களை சந்தித்து அவர்களது இயற்கை விவசாய முறைகளை பார்த்து ஆராய்ந்து பின்பற்றுவதே சிறந்தது என எண்ணினார். அதன் படி இயற்கை விவசாய முறைகளை பார்த்ததில் ஆலங்குடி பெருமாள் செய்து வரும் இயற்கை விவசாய முறையை (ஆலங்குடி பெருமாள் விவசாயமுறை நம்வழி வேளாண்மை பருவம் 21 இதழ் 4ல் விவரமாகக் கொடுக்கப் பட்டுள்ளது) தேர்வு செய்து அதில் இவரது எண்ணங்களுக்கு தகுந்தாற்போல் மாற்றி இயற்கை விவசாயத்தை சிறந்த முறையில் செய்து வருகிறார்.

**நாற்றங்கால் தயார் செய்தல்**



ஆலங்குடி பெருமாள் முறைப்படி ஏக்கருக்கு 1/4 கிலோ விதை போதுமானது. ஆனால் இவர் ஏக்கருக்கு 2 கிலோ விதை வீதம் தேவையான நிலத்திற்கு நாற்றங்கால் தயார் செய்து விடுகிறார். இவர் தனது 83 ஏக்கர் நிலத்திற்கு தேவையான நல்ல தரமான பாரம்பரிய ரகங்களில் 30 வகையான நெல் விதைகளை இடுகிறார். இவைகளில் மாப்பிள்ளை சம்பா, காட்டியானம், சிகப்பு கவுனி, கருப்பு கவுனி, பூங்கார், கருங்குறுவை, வாலான், கருடன் சம்பா, வைரா, குள்ள காரு, இலுப்பை பூ சம்பா, சீரக சம்பா, தூய மல்லி, பொம்பி, கொட்டா சம்பா, மஞ்சள் பொன்னி, சிங்கினி கார், தேங்காய் பூ சம்பா, கண்டசாலி, முத்தின சன்னம், குழியடிச்சான், காளான்நடக்கு போன்றவைகள் குறிப்பிடத்தக்கவை.

**நடவு**

ஆலங்குடி பெருமாள் முறையில் 50செ.மீX50செ.மீ என்ற இடைவெளியில் நடவு செய்யப்பட்டது. ஆனால் இவர் முதலில் கலந்த நடவு, பட்ட நடவு, ஸ்ரீ நடவு, இயந்திரம் நடவு மற்றும் பெருமாள் முறைபடி 50செ.மீ X 50செ.மீ இடைவெளி நடவு என்ற முறைகளில் நடவு செய்து பார்த்ததில் இவர் தற்போது பெருமாள் முறையே சிறந்தது என 50 செ.மீ X 25 செ.மீ என்ற முறைபடி நடவு செய்து வருகிறார். நடவு ஆட்கள் கொண்டே நடவு செய்யப்படுகிறது.

**களையே உரம்**

இவர் பயிர்களுக்கு உரமிடுவது கிடையாது. பயிர்களுக்கு வயலில் வளரும் களைகளே உரம் என்று கூறுகிறார். இவர் முறைப்படி குறுவை சம்பா நெல் சாகுபடிக்கு பிறகு பயறு, உளுந்து பயிரிடுகிறார். பயறு, உளுந்து பயிரிடும் போது வயலுக்கு தண்ணீர் பாய்ச்சி களைகளை வளர விடுகிறார். பயறு, உளுந்து அறுவடைக்கு பின்பு வயலில் தண்ணீர் பாய்ச்சி களைகளை மடக்கி உழுது விடுகிறார். பின்பு இரண்டாவது முறையும் களைகளை வளர விட்டு பின் மடக்கி உழுது விடுகிறார். இதன்பின்பு இரண்டு மாதம் வயலுக்கு ஓய்வு விடப்படுகிறது. இவரது நெல் வயலில் கை வைத்து தோண்டி பார்த்தால் 1/2–1 அடி ஆழத்திற்கு இலை மக்கு உரம் இருக்கிறது. இயற்கை உரமாக சாண எரிவாயு கழிவு கூழ் ஏக்கருக்கு 20 லிட்டர் வீதம் வயலின் ஓர் இடத்தில் ஊற்றப்படுகிறது. வயலில் தண்ணீர் நிற்பதால் அந்த சாண எரிவாயு கழிவு கூழ் வயல் முழுவது பரவிவிடுகிறது. பயிர்கள் குளிர் காலத்தில் வேர் மூலம் சத்து எடுத்து கொள்ளாது. ஆகவே இயற்கை நீர் உரங்களை இலை வழியாக தெளிப்பான் மூலம் தெளிப்பது வழக்கம். 20 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளிக்க வேண்டும்.

**நெற்பயிர் சாயாமல் இருக்க**

வயலில் எப்போதும் தண்ணீர் இருக்க வேண்டும் என்று சொல்கிறார். தண்ணீரை வடிகட்டுவதே கிடையாது. வயலில் தண்ணீர் இருந்தால் பயிர் சாய்ந்து விடாது என்று கேட்டதற்கு பயிரின் எடையை நீர் சுமந்து கொள்வதால் பயிர் சாயாது என்று கூறுகிறார். வயலில் தண்ணீரை வடிகட்டினால் மட்டுமே பயிர் தண்ணீர் ஓடும் திசையில் சாய்கிறது என்று கூறுகிறார்.

**நீர் நின்றால் களை இல்லை**

வயலில் களை எடுப்பதே கிடையாது. பயிருக்கு இடைவெளி 50 செ.மீ.X 50 செ.மீ அல்லது 50 செ.மீX 25 செ.மீ என்பதால் பயிர் நன்கு தூர் விட்டு நன்கு வருகிறது. அத்துடன் பயிருக்கு சூரிய ஒளி நன்கு கிடைத்து திறட்சியாக வளர்கிறது. மேலும் தண்ணீர் இருந்து கொண்டே இருப்பதால் களைகள் முளைக்க வாய்ப்பு இல்லை. அப்படி வயலில் எங்கேயாவது மேடு இருந்தால் அந்த இடத்தில் களை முளைக்கிறது. அப்படி இருந்தால் அந்த களைகளை மட்டும் ஆள் கொண்டு மிதித்து விடப்படுகிறது.

**பூச்சி கட்டுப்பட பூச்சி முட்டைகளை நீக்குதல்**

இவர் பயிர்களுக்கு பூச்சி மருந்து தெளிப்பதே இல்லை. இவரது இயற்கை விவசாய முறையில் பயிர்களை பெரும்பாலும் பூச்சிகள் தாக்குவது இல்லை. அப்படி ஏதும் பூச்சிகள் தாக்கினால் இரண்டு மூன்று நாட்களில் தானாகவே சரியாகிவிடும். அதாவது அந்த பூச்சிக்கு எதிரி பூச்சி உருவாகி அழித்து விடும். அப்படி மேலும் பூச்சி தாக்குதல் இருந்தால் பூச்சி முட்டைகளை கண்டுபிடித்து எடுத்து அழித்து விடுவது வழக்கம். அல்லது வேப்பங் கொட்டை கரைசல் அல்லது வேப்ப எண்ணெயை அல்லது புங்கம் எண்ணெயை தெளித்தால் பூச்சி தாக்குதல் கட்டுப்படும்.

பயிரை எப்போதும் மாலை 3 மணியிலிருந்து 5 மணிக்குள் கூர்ந்து கவனித்தால் பூச்சி தாக்குதல், பயிர் வியாதி, பயிர் சத்து குறைபாடு போன்றவற்றை நன்றாக எளிதில் கண்டறியலாம். பெரும்பாலும் பயிர்களுக்கு நாம் எதையும் தனித்து செய்ய தேவை இல்லை. பயிர் அதுவாக வளர்ந்து நோய் தாக்குதல், பூச்சி தாக்குதல், அனைத்தையும் சமாளித்து வந்து விடும். அதாவது அதற்கான சுற்றுச்சூழலில் (Plant ecosystem) நிலைத்து நிற்கும். மேலும் பயிர் பராமரிப்புக்கு கடையில் போய் எதையும் வாங்கக்கூடாது என்பதும் அங்குள்ள பொருட்களை கொண்டே பயிரை வளர்க்க வேண்டும் என்பதும் ஒரு கொள்கையாக கடைபிடித்து வருகிறார். கம்பு, கேழ்வரகு தனியாக 2 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்து வருகிறார்.

**கரும்பு சாகுபடி**

ஓர் ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்து வருகிறார். இந்த ஓர் ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிட்டு 5 வருடமாகிறது. கரும்புக்கு உரமிடுவது மற்றும் களை எடுப்பது எதுவும் கிடையாது. ஆனால் இதிலிருந்து வருடத்திற்கு 10 டன் கரும்பு விளைச்சல் எடுப்பதாக தெரிவிக்கிறார்.

**கலந்தாய்வு மதிப்பீடு செய்தல்**

இம்முறையில் 22 விவசாய குழுக்கள் தஞ்சாவூர், நாகப்பட்டிணம், திருவாரூர், திருச்சி, காரைக்கால் பகுதியிலிருந்து சுமார் 300 உறுப்பினர் இயற்கை விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் மூன்று குழுக்கள் தர நிர்ணய குழு, மேலாண்மை குழு, விற்பனை குழு, என்ற குழுக்கள் இயற்கை விவசாய உறுப்பினர்களது விளை பொருட்களை தாம் நிர்ணயிப்பது, நிர்வாக வேலை, மற்றும் பொருட்களை விற்பனைக்கு ஏற்பாடு செய்வது போன்ற வேலைகளை கவனித்து வருகிறார்கள், இக்குழுக்கள் பிரச்சினையின் அடிப்படையில் தேவைப்படும் சமயம் கூட்டம் கூடிப் பேசுவார்கள்.

விளைபொருட்களை பதிவு செய்யப்பட்ட வாடிக்கை யாளர்களுக்கு அதாவது இயற்கை அரிசியாக மாற்றி விற்பனை செய்து வருகிறார்கள். இயற்கை விவசாயிகளுக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்வித அங்கீகாரமும் மானியமோ கிடைப்பது இல்லை. இவர்களது விளை பொருள்களை தரம் கூட்டப்பட்ட பொருளாக மாற்றி தேவைப்படுவோரைக் கண்டறிந்து விற்பனை செய்து வருகின்றனர். இவர் மற்ற இரசாயன உரமிடும் விவசாயிகளைப் போலவே நல்ல மகசூல் உரமிடாமல் எடுத்து வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது. விதையளவு, நாற்றங்கால் அளவு, உரமிடாமை, களைகட்டுப்பாடு போன்றவற்றில் உற்பத்தி செலவை 50 சதவீதம் குறைப்பதால் விவசாயத்தில் லாபம் கூட்டலாம் என்று கூறுகிறார்.

ஆர். ஸ்ரீராம்
த/பெ. இராமமூர்த்தி
இயற்கை வழி பண்ணை
பெருமாள் கோவில் தெரு
கதிராமங்கலம், குத்தாலம்
நாகப்பட்டிணம் மாவட்டம்.
செல் : 9003955969
தொகுப்பு : சி. பாலசுப்ரமணியன், சேவா

## பிரகாஷின் இயற்கை வேளாண்மை உத்திகள்

பிரகாஷ் (63) எஸ்.எஸ்.எல்.சி வரை படித்து விட்டு கேரளா போக்குவரத்து துறையில் வாகன கண்காணிப்பளராக வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளார். தனது சொந்த ஊரான ஆலப்புழை அருகே சேர்த்தலாவில் 7 ஏக்கரில் கடந்த 8 ஆண்டுகளாக இயற்கை முறையில் காய்கறி சாகுபடி, மீன்வளர்ப்பு செய்து வருகிறார். இவர் பாரம்பரிய காய்கறி செடிகளின் விதைகளையும் விநியோகித்து வருகிறார். இவருடைய மகன் (அகிலன்) தமிழ்நாட்டில் கப்பல் சம்பந்தப்பட்ட பட்டப்படிப்பு படித்து விட்டு 6 மாதம் கப்பலிலும் மீதி 6 மாதம் தந்தைக்கு உதவியாக ஊரில் விவசாயத்தையும் கவனித்து வருகிறார். தற்போதுள்ள சூழ்நிலையில் சம்பள ஆள் கூலி ஒரு நாளைக்கு ரூ.600ம் சாப்பாடும் தர வேண்டும். எனவே கூடுமான வரை உழுதல் போன்ற வேலைகளை குடும்பத்தவரே செய்கின்றனர். இவர் மாநில அளவில் விவசாய விருதுகளைப் பெற்றுள்ளார். இவரது வேளாண்மை உத்திகள் பின்வருமாறு:

**வட்ட வட்ட மேட்டுப்பாத்தி**



மழைக்காலத்தில் நிலத்தில் சுமார் ஓர் அடி வரை நீர் தேங்கும். இதற்கு ஈடு கொடுக்க சுமார் 3–4 அடி உயர வட்டமான மேடை சுமார் 7 அடி அகலத்தில் அமைத்து அதன் மேற்புரம் சுற்றி கரை போட்டு அதில் படரும் காய்கறி செடி (கோவைக்காய், பாகற்காய், புடலங்காய், பீன்ஸ்) வளர்க்கிறார். ஒவ்வொரு மேட்டுப்பாத்தியிலும் கீரை (சிவப்பு, பச்சை) செடிகளையும் வளர்க்கிறார். கீரையை 35 நாட்களில் பிடுங்கி காய்கறி செடியாக விற்பனை செய்வார். 3 மாதங்கள் வரை பந்தலில் படரும் காய்கறிகளை வளர்த்து அறுவடை செய்கிறார். முதல் முறை பந்தலில் பாகற்காய் போட்டால் அடுத்த ஆண்டு கோவைக்காய் அல்லது புடல், அவரை, பீன்ஸ் என மாற்றி பயிர் செய்கிறார். நிலத்தில் தண்ணீர் தேங்கினாலும் மேட்டுப்பாத்தி பயிர்கள் பாதிப்படையாது. சுமார் 10 அடி இடைவெளியில் மேட்டுப்பாத்திகள் உருவாக்கப் படுகின்றன.

**நாட்டு வெண்டை ரகம்**

வெண்டைக்காயில் நாட்டு இரகங்களைத் தேர்வு செய்து பச்சை நாட்டு இரக வெண்டைக்காயை ஓர் ஏக்கர் பயிர் செய்துள்ளார். நாட்டு ரக வெண்டைக்காயில் பூச்சி நோய் தாக்குதல் குறைவு, 3 மாதம் வரை அறுவடை செய்யலாம் (நவீன இரகத்தில் 2 முறை மட்டும் தான் அறுவடை செய்ய முடியும்). இவருடைய வெண்டைக்கு மார்க்கெட்டில் கிராக்கி அதிகம். கிலோவிற்கு ரூ.5 அதிகமாக விலை கிடைக்கிறது. இவருடைய பண்ணைக்கு எர்ணாகுளத்திலிருந்து வேன்வந்து காய்கறிகளை ஏற்றிச்செல்கின்றன. இவருடைய காய்கறிகளுக்கு நிறுவை செய்யப்பட்டு வங்கி மூலம் பணப்பட்டுவாடா நடைபெறும்.

**பூச்சி, நோய்களுக்கு புகை மூட்டம்**

காய்கறிச்செடிகள் குறிப்பாக பந்தலில் காய்க்கும் பாகற்காய், புடலங்காய், கோவைக்காய் செடிகளுக்கு நித்தமும் காய்ந்த விவசாய கழிவுகளைக் கொண்டு புகை மூட்டம் செய்கிறார். இதனால் பூச்சி நோய் தாக்குதல் குறைகிறது என கூறுகிறார்.

**மீன் அமினோ கரைசல்**

ஒரு பாத்திரத்தில் மீன் கழிவு 1 கிலோ, வெல்லம் 1கிலோ சேர்த்து 20 நாட்கள் அப்படியே வைத்து விட வேண்டும். இது கரைந்து விடும். இதிலிருந்து 1 மடங்கிற்கு 10 மடங்கு நீர் சேர்த்து பயிருக்கு தெளிக்க வேண்டும். இதனை வாரம் ஒரு முறை பயிர்களுக்கு தெளித்து விடுகிறார்.

**வெள்ளைப்பூண்டு, வேப்பெண்ணெய் கரைசல்**

வேப்பெண்ணெய் 150 மி.லி எடுத்து 100 கிராம் சோப் சேர்த்து நீரில் கரைக்க வேண்டும். இத்துடன் வெள்ளைப்பூண்டு 50 கிராம் அரைத்து சேர்க்க வேண்டும். இதனுடன் பத்து மடங்கு நீர் சேர்த்து பயிருக்குத் தெளிக்க வேண்டும். இதனால் பூச்சிகள் கட்டுப்படும்.

**கோமூத்திரக் கரைசல்**

பசுமாட்டு சாணம் 1 கிலோ, பசுமாட்டு கோமியம் 1 லிட்டர், கடலைப்பிண்ணாக்கு 1 கிலோ சேர்த்து 10 நாட்கள் புளிக்க விட வேண்டும். இத்துடன் 10 மடங்கு நீர் சேர்த்து

பயிருக்குத் தெளிக்க வேண்டும். இதனால் பயிருக்கு இயற்கை உரம் கிடைக்கும்.

**புகையிலைக் கரைசல்**

புகையிலை 1/4 கிலோ, சோப் 250 கிராம், 10 லிட்டர் நீரில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலை இத்துடன் 10 மடங்கு நீர் சேர்த்து பயிருக்குத் தெளித்தால் பூச்சிகள் கட்டுப்படும்.

**மலை இஞ்சி**

தனது தோட்டத்தில் மலை இஞ்சியை ஆங்காங்கே வேலி ஓரத்தில் நட்டுள்ளார். இதனை அரைத்து மாடுகளுக்குத் தர வயிறு உப்பிசம் போன்ற ஜீரண குறைபாடு நீங்கும்.

**காய்ச்சலுக்கு**

தோட்டத்தில் லெமன் கிராஸ் புல் வளர்க்கிறார். மாடுகள், மனிதர்களுக்கு துளசி, லெமன்கிராஸ், தேங்காய் சிரட்டை சேர்த்து நீரில் வேக வைத்து ஆவி பிடித்தால் காய்ச்சல் விலகும்.

**மீன் குட்டை**

தனது தோட்டத்தில் 4 இடங்களில் பண்ணை குட்டை ஏற்படுத்தி அதில் மலேசியன்வாலா என்ற மீன் இரகத்தை வளர்த்து வருகிறார். நித்தமும் 5 கிலோ தேங்காய், கடலை பிண்ணாக்கு, வீட்டு சாப்பாட்டு கழிவுகளை கலந்து விடுகிறார். 8 மாதங்கள் மீன் குஞ்சுகள் வளர்ந்து அறுவடைக்கு வந்து விடும்.

**பிளாஸ்டிக் தட்டில் நாற்றங்கால்**

பிளாஸ்டிக் தட்டில் உள்ள குழிகளில் தென்னை நார்க்கழிவு (சாண எரிவாயு கரைசலில் ஊறியது) வைத்து செடிகள் வளர்க்கிறார்.

**கொசுத்தேன் எடுத்தல்**



மருத்துவக்குணம் கொண்ட தேனை 6 மாதங்களுக்கு ஒரு முறை மண்பானைகளிலிருந்து அறுவடை செய்கிறார். மண்பானையில் ஒரு துவாரம் இட்டு வாய்ப்பகுதியை களிமண் வைத்து பூசி மூடி விட வேண்டும். 6 மாதங்களுக்கு ஒரு முறை மண் பானையைத் திறந்து உள்ளே உள்ள ராட்டிலிருந்து தேன் சேகரிக்கிறார்.

**காட்டு யானை கிழங்கு**

இந்த பயிர் வளர்த்து இதன் கிழங்கை நறுக்கி காய வைத்து பொடி செய்து அல்சருக்காக பயன்படுத்தி வருகிறார்.

**நாட்டு சேம்பு**

கொளகேசியா எனக் கூறப்படும் நாட்டு சேம்பு வளர்த்து விநியோகம் செய்கிறார்.

**கண்காட்சியில் பாரம்பரிய விதை விற்பனை**

அரசு, தனியார் நடத்தும் கண்காட்சிகளில் விதை ஸ்டால் ஏற்படுத்தி விதைகளை விநியோகம் செய்து வருவாய் எடுக்கிறார்.

சி.ஜி. பிரகாஷம்
செம்மாட்டு கவுஸ்
தைரா, சார்தலா (தெற்கு)
ஆலப்புலா–688539

## பாலசுப்ரமணியனின் வேளாண்மை உத்திகள்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தாலுகா, டி.ஜேடர்பாளையத்தில் வசிப்பவர் திரு.டி.கே. பாலசுப்ரமணியன்(வயது66). இவர் பழைய எஸ்.எஸ்.எல்.சி வரை படித்துள்ளார். இவருக்கு 10 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் மரவள்ளி கிழங்கு, கரும்பு, மஞ்சள், சேனைக்கிழங்கு, நெல் போன்ற பயிர்களை இயற்கை முறையில் சாகுபடி செய்து வருகிறார். இவர் இயற்கை முறையில் கம்போஸ்ட் உரம் தயார் செய்து விவசாயிகளுக்கு விற்பனையும் செய்து வருகிறார்.

**கம்போஸ்ட் உரம் தயார் செய்தல்**

முதலில் இவர் தென்னை நார்க்கழிவு, கோழிப்பண்ணை கழிவு மற்றும் மண் ஆகிய மூன்றையும் ஒரு விகிதத்தில் கலந்து இயற்கை கம்போஸ்ட் உரமாக தனது பயிருக்கு பயன்படுத்தி வந்தார். மற்ற விவசாயிகளுக்கும் விற்பனை செய்து வந்தார். தற்போது கரும்பாலை கழிவு, கோழி கழிவு, மாட்டு சாணம் போன்றவற்றை பயன்படுத்தி உரம் தயாரிக்க ராக்பாஸ்பேட் போன்றவற்றை குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து இயற்கை

கம்போஸ்ட் உரமாக தயார் செய்து தான் பயன்படுத்துவதுடன் பெரிய அளவில் விற்பனையும் செய்து வருகிறார். மேற்கண்ட கம்போஸ்ட் உரத்தை பயன்படுத்தினால் நல்ல மகசூல் கிடைப்பதாக தெரிவிக்கிறார்.

**பூச்சி மருந்து தயார் செய்தல்**

எட்டி தழை, ஒடுவம் தழை, மஞ்சள் அவுரி தழை, நொச்சி தழை, காட்டாமணக்கு தழை, வேப்பிலை, எருக்கன் இலை, ஊமத்தை இலை ஆகிய தழைகள் ஒவ்வொன்றிலும் 5 கிலோ அளவுக்கு எடுத்துக் கொண்டு அவற்றை இடித்து 15 லிட்டர் பசு மாட்டு கோமியத்தில் 15 நாள் ஊறல் போட வேண்டும். பின்பு ஒரு லிட்டர் கலவையை ஒரு ஸ்பிரேயர் தண்ணீரில் கலந்து வயலில் எந்த பயிருக்கு வேண்டுமானாலும் அடிக்கலாம். இவ்வாறு ஏக்கருக்கு 10 டேங்க் அடித்தால் பூச்சி கட்டுப்படும்.

**தென்னை காண்டாமிருக வண்டிற்கு**

தென்னையில் காண்டாமிருக வண்டை கட்டுப்படுத்த இரவில் விளக்கு பொறி வைத்து வண்டுகளை பிடித்து அழிக்கலாம். அல்லது ஒரு தொட்டியில் ஆமணக்கு புண்ணாக்கை ஊறல் போட்டு தென்னை தோப்பில் வைத்தால் அப்புண்ணாக்கு வாசனைக்கு அனைத்து காண்டாமிருக வண்டுகளும் அத்தொட்டியில் வந்து விழுந்துவிடும். பின்னர் இதனை அப்புறப்படுத்தலாம்.

டி.கே. பாலசுப்ரமணியன்
த/பெ. கைலாச கவுண்டர்
சட்டத்துகாரர் தோட்டம்
டி.ஜேடர்பாளையம் அஞ்சல்
நாமகிரிபோட்டை வழி
இராசிபுரம் தாலுகா
நாமக்கல் மாவட்டம்

## குப்புசாமியின் கால்நடை வைத்தியம்



நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தாலுகா, போதமலை கீழுரில் வசிப்பவர் திரு. குப்புசாமி (வயது 70). இவருக்கு 3 ஏக்கர் விவசாயம், 5 நாட்டு மாடு, 2 ஆடு, 2 பன்றிகள் ஆகியவற்றை பராமரித்து வருகிறார். இவர் போதமலையில் புழுதிகார், நெல், வரகு, சாமை, சோளம், கம்பு போன்ற பயிர்களை வழக்கமாக பயிரிட்டு வருகிறார். இவர் கால்நடைகளுக்கு கீழ்கண்ட மூலிகை வைத்தியத்தைக் கடைபிடித்து வருகிறார்.

**குந்து நோய்க்கு**

குண்டுமணி தழை – 1 கைப்பிடி அளவு, சுக்கு– 50 கிராம், சீரகம் – 50 கிராம், மிளகு– 50 கிராம், பூண்டு –1
மேற்கண்டவற்றை அரைத்து ஒரு துணியில் எடுத்து அதில் சிறுபிள்ளை மூத்திரத்தை சேர்த்து அந்த சாற்றை பாதிக்கப்பட்ட மாட்டின் மூக்கில் 2–3 சொட்டு விட வேண்டும். இதனை தொடர்ந்து மூன்று வேளை செய்து வர குந்து நோய் குணமாகும்.

**கோமாரி நோய்க்கு**

மாட்டு கொட்டகையின் அருகில் வேப்பிலை கொண்டு கூடாரம் கட்டி அதில் தொடர்ந்து 5 நாட்களுக்கு விளக்கு போட்டு வர வேண்டும். மேலும் வேப்ப இலை மற்றும் மஞ்சள் இரண்டையும் சேர்த்து அரைத்து பாதிக்கப்பட்ட மாட்டுக்கு பூச வேண்டும். இவ்வாறு செய்தால் கோமாரி நோய் குணமாகும். நோய் மற்ற மாடுகளுக்கும் பரவாது.

**வயறு உப்பிசத்திற்கு**

புளியை கரைத்து உள்ளுக்கு கொடுத்தால் வயிறு உப்பிசம் குணமாகும்.

**வாய்கானைக்கு**

பன்றி நெய்யை பாதிக்கப்பட்ட மாட்டின் வாயில் தடவி வந்தால் வாய்கானை குணமாகும்.

**ராணிகட் கழிச்சலுக்கு**

அரிசியை பன்றி நெய்யில் ஊற வைத்து காலையில் கோழிக்கு உணவாக போட்டால் ராணிகட் கழிச்சல் குணமாகும்.

திரு. குப்புசாமி
த/பெ. குப்புசாமி கவுண்டர்
மோர்புளிகாடு
கீழூர் அஞ்சல், போதமலை
ராசிபுரம் தாலுகா
நாமக்கல் மாவட்டம்
தொகுப்பு: பாலசுப்ரமணியன், சேவா

## கப்புகாண்டியின் கால்நடை வைத்தியம்



நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தாலுகா, போதமலை கீழூரில் வசிப்பவர் திரு. கப்புகாண்டி கவுண்டர் (வயது 54). இவருக்கு 3 ஏக்கர் நிலம் மற்றும் 2 பசுமாடு உள்ளது. இவர் பின்பற்றிவரும் கால்நடை மூலிகை வைத்திய முறைகள் பின்வருமாறு :

**காய்ச்சல், வரகுந்து**

வரமத்தியான் தழை இரண்டு கைப்பிடி அளவு இதனுள் பனைவெல்லம் 100 கிராம் சேர்த்து அரைத்து கவளமாக உருட்டி தொடர்ந்து மூன்று நாட்கள் கொடுத்தால் நோய் குணமாகும்.

மிளகரனை – 1 கைப்பிடி, பூண்டு –1 , வெங்காயம் –150 கிராம், மிளகு– 10 கிராம். ஆகியவற்றை அரைத்து அதனுடன் சிறுபிள்ளை மூத்திரம் சேர்த்து மாட்டுக்கு நசியம் விட நோய் குணமாகும்.

குண்டு மணி இலை – 1 கைப்பிடி, அந்திமல்லி கிழங்கு– 1 மேற்கூறிய இரண்டையும் அரைத்து அதனுள் சிறுபிள்ளை மூத்திரத்தை சேர்த்து நசியம் விட நோய் குணமாகும்.

**மடி நோய், மடி வீக்கத்திற்கு**

நான்கு கனு தழையை அரைத்து பாதிக்கப்பட்ட இடத்தில் பூச வேண்டும்.

**கழிச்சலுக்கு**

ஆத்தி இலையை அரைத்து கவளமாக மூன்று நாட்கள் கொடுத்து வர நோய் குணமாகும். மூங்கில் இலையை அரைத்து கவளமாக மூன்று நாட்கள் கொடுத்து வர நோய் குணமாகும்.

**சர்க்கரை வியாதிக்கு**

மனிதர்களுக்கு சர்க்கரை தழையை அரைத்து குடித்து வந்தால் சர்க்கரை வியாதி குணமாகும். காட்டு இஞ்சி அரைத்து மூன்று நாட்களுக்கு சாப்பிட்டு வர சர்க்கரை நோய் குணமாகும்.

கப்புகாண்டி கவுண்டர்
த/பெ. குப்புசாமி கவுண்டர்
வேலடிகாடு, கீழூர், போதமலை, ராசிபுரம் தாலுகா
நாமக்கல் மாவட்டம்
தொகுப்பு : பாலசுப்ரமணியன், சேவா

## சுக்கை கெடாமல் பாதுகாக்க கிராம்பு

பேபி மேத்யூ கேரளாவில் இடுக்கி மாவட்டத்திலுள்ள ராஜாக்காடு எனும் இடத்திற்கு அருகே முல்லக்கண்ணம் என்ற இடத்தில் ஈஸ்ட் லேண்ட் இந்தியா எனும் நிறுவனத்தை வைத்துள்ளார். இவரது சுக்கு காபி தயாரிப்பு பிரபலமானதாகும். இவரது அனுபவத்தில் சுக்கை நீண்ட நாட்கள் கெடாமல் வைத்துக் கொள்ளும் எளிய முறை ஒன்றை பின்பற்றி வருகின்றார்.

இவரது அனுபவம் சுக்கை சேமித்து வைக்கும் போது அத்துடன் கிராம்பையும் கலந்து வைக்க வேண்டும். வீடுகளில் அவசரகால வைத்தியம் மற்றும் சமையல் தேவைகளுக்காகவும், விவசாயிகள் தாங்கள் அரும்பாடுபட்டு உற்பத்தி செய்த சுக்கை நல்ல விலை வரும் வரை சேமித்து வைத்து விற்கவும் இந்த முறை உதவியாக இருக்கும்.

உதாரணமாக 50 கிலோ கொண்ட ஒரு சுக்கு மூட்டைக்கு 50 கிராம் கிராம்பை போட்டு வைத்தால் பல வருடங்களுக்கு சுக்கு கெடாமல் இருக்கும் என்பது பேபி மேத்தியூவின் அனுபவம். இவ்வாறு பாதுகாக்கப்பட்ட சுக்கை மரத்தால் செய்யப்பட்ட பெட்டிகளுக்குள் ஈரப்பதம் இல்லாத வகையில் வைக்க வேண்டும் என்பது முக்கியம்.

இவர் தயாரிக்கும் சுக்கு காபிப்பொடியை சுடுநீரில் கரைத்தால் போதும் சுக்குக் காபி தயார். இந்தப் பொடியில் காபி, ஏலக்காய், கிராம்பு, கொத்தமல்லி, சீரகம், வெந்தயம், சுக்கு, மிளகு, கிராம்பு பட்டை, வெல்லம் மற்றும் சில மூலிகைச் செடிகளும் சேர்க்கப்படுகின்றன இவற்றைத் தயாரிக்கும் எந்திரத்தை வடிவமைத்ததும் இவரே ஆவார்.

இது மட்டுமின்றி ஜாதிக்காயின் தோலிலிருந்து ஊறுகாய் மற்றும் ஒயின் தயாரிக்கின்றார். மேலும் ஸ்பைசஸ் தொடர்பான பல மதிப்பூட்டிய பொருட்களைத்

தயாரிக்கிறார். இதுவே இவரது தனித்தன்மையான தயாரிப்பாகும். தமது தயாரிப்புகளை Amazon, Ebay மற்றும் தமக்குத் சொந்தமான eastiandindia.com என்ற வலை தளத்தின் மூலமாகவும் விற்பனை செய்து வருகிறார். இவரை eastlandcoffee@gmail.com / 09961561630 மூலம் தொடர்பு கொள்ளலாம்.

நன்றி : ஸ்பைஸ் இந்தியா, நவம்பர்– 2016

## சதகுப்பையின் மருத்துவ குணம்

சதகுப்பை கால்நடை மருத்துவத்தில் காய்ச்சல், அஜீரணம், காயங்கள், பாலின் அளவையும், தரத்தையும் அதிகப்படுத்த பழங்காலம் முதலாகவே பயன்படுத்தப் பட்டு வருகிறது. சதகுப்பையின் மருத்துவ குணம் என்பது சிறுநீரின் வெளிவரும் வேகத்தை அதிகப்படுத்துவது. வாய் துர்நாற்றத்தைப் போக்குவது. வயிற்றோட்டத்தை நிறுத்துவது, நீரிழிவு நோயைத் தடுப்பது. அழுகாமல் தடுப்பது போன்றவையாகும்.

**மூச்சுத் திணறலுடன் கூடிய காய்ச்சலுக்கு**

மாடுகள் பின் பக்கம் வளைந்து நிற்கும். கீழே படுப்பதை விட நின்று கொண்டிருப்பதையே விரும்பும். இதற்கு ஒரு கைப்பிடி சதகுப்பை, ஓமம், மஞ்சள் பொடி, ஒரு வெள்ளைப் பூண்டு, நான்கு கைப்பிடி வில்வ இலை ஆகியவற்றை நன்கு இடித்து இரண்டு லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு நாளைக்கு ஒரு முறை வீதம் ஒரு வாரத்திற்கு கொடுக்க வேண்டும்.

**அஜீரணத்திற்கு**

தீவனத்தில் மாற்றம், மழைக்காலத்தில் இளம் தளிர்களை மேய்வதால் கால்நடைகளுக்கு அஜீரணக் கோளாறுகள் ஏற்படலாம். இந்த நிலையில் அவை தீவனம் எடுக்காது. வயிற்றுப் பகுதி உப்பி பருத்திருக்கும். வயிற்றில் வாயு நிறைந்திருக்கும். இதற்கு ஒரு கைப்பிடி அளவு சதகுப்பை இலை மற்றும் வெந்தயத்தை போதுமான நெய் ஊற்றி வறுக்க வேண்டும். இத்துடன் ஒரு டீஸ்பூன் அளவு உப்பு, கடுகு, மிளகாய்ப்பொடி ஆகியவற்றை சேர்த்து நன்றாக அரைக்க வேண்டும். இதில் அரை லிட்டர் மோர் கலந்து கால் நடைகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு நேரம் வீதம் இரண்டு நாட்களுக்கு புகட்ட வேண்டும்.

**காயத்திற்கு**

காயங்கள் ஏற்பட்டால் ஒரு கைப்பிடி சதகுப்பை இலையுடன் ஒரு ஸ்பூன் மஞ்சள் பொடி சேர்த்து பூசினால் காயங்கள் குணமாகும். மேலும் சீழ் பிடிக்காது.

**பால் பெருக**

சில சமயங்களில் பால் தண்ணீராகவும், கெட்ட வாடையுடன், இரத்தம் கலந்து, பாலின் அளவு குறைந்தும் இருக்கும். இதற்கு ஒரு கைப்பிடி அளவு கொண்டைக் கடலையை ஒரு நாள் இரவு முழுவதும் நீரில் ஊற வைக்க வேண்டும். பின் அந்த நீரில் ஒரு கைப்பிடி சதகுப்பை, வெந்தயம், சீரகம் சேர்த்து 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். இந்த கலவை ஒரு நாளைக்கு உள்ளதாகும். இதை ஒரு வாரத்திற்கு கொடுக்க வேண்டும்.

**பசு தண்ணீராக பால் கறந்தால்**

நான்கு டீஸ்பூன் சதகுப்பை, வெந்தயம், சீரகப்பொடி, ஒவ்வொன்றும் 100 கிராம் வீதம் கொண்டைக் கடலை, கோதுமை ஆகியவற்றுடன் கலந்து ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் ஐந்து நாட்களுக்குத் தர வேண்டும்.

Dr. Ganesh Hegde, Regional Research Officer
Animal Disease Diagnostic Laboratory and Information Center Institute of Animal Health and Veterinary Biologicals Veterinary Hospital Compound
CP Bazar, Sirsi (Uttara Kannada) - 581 401
Cell : 09448995595

நன்றி : ஸ்பைஸ் இந்தியா, நவம்பர்– 2016

## சாந்தகுமாரியின் உத்திகள்



சாந்தகுமாரி (45) எஸ்.எஸ்.எல்.சி வரை படித்து விட்டு வயநாடு மாவட்டம், அம்பலவயலில் குடும்ப ஸ்ரீ திட்டத்தில் மகளிர் குழு தலைவியாக உள்ளார். இவர் தன்னுடைய 2 பிள்ளைகளையும் படிக்க வைத்து அவர்கள் சென்னையில் வேலை பார்க்கின்றனர். இவருக்கு 4 ஏக்கர் நிலம் உள்ளது. மகளிர்குழுவில் பயிற்சி பெற்று பல உத்திகளை கடைபிடித்து வருகிறார்.

**வீட்டுக்கு முன் துளசி, மத்தியில் மீன் தொட்டி**

வீட்டு வாசலில் துளசிமாடமும் இதற்கு இரு புறமும் தரையில் கருந்துளசி கன்றுகளும் வைத்துள்ளார். விட்டுக்குள் நுழைந்தால் சுமார் 6 x 6 அடியில் தொட்டி வைத்து மீன் வளர்க்கிறார். தொட்டியில் (பள்ளத்தில்) நடுவே சிவன் சிலை வைத்து வழிபடுகிறார். நித்தமும் பூஜை செய்து வருகிறார்.

**தேங்காய் + இஞ்சி பானம்**

தேங்காய் துருவலுடன் இஞ்சி சேர்த்து மிக்ஸியில் அடித்து பின்னர் வடிகட்டி பானமாக விருந்தினர்களுக்கு அளிக்கிறார்.

**பயிருக்கு ஊட்டக்கரைசல்**

சாணம், கோ மூத்திரம், சீமைக்கொன்னை (கிளிரிசிடியா) வேப்பம்பிண்ணாக்கு சமபங்கு சேர்த்து 40 நாட்கள் ஊற வைக்கிறார். பின்னர் 1 லிட்டருக்கு 10 லிட்டர் நீர் கலந்து பயிர்களுக்கு தெளிக்கிறார். இவர் இஞ்சி, பாகற்காய், முட்டைக்கோசு, மிளகாய் பயிர் செய்கிறார்.

**புகையிலைக்கரைசல்**

புகையிலையை 200 கிராம் அளவு எடுத்து மாட்டு கோமியம் 1 லிட்டரில் கலந்து 1–2 நாட்கள் ஊற வைத்து வடிகட்டி இத்துடன் காதிசோப் 100 கிராம் கலந்து 10 மடங்கு நீர் சேர்த்து தெளித்தால் பூச்சி தாக்குதல் குறைவதாகக் கூறுகிறார்.

**தலைவலிக்கு**

தொட்டாற்சிணுங்கி இலையை அரைத்து நெற்றியில் பத்து போட வேண்டும்.

**அல்சருக்கு**

நாக வெத்தலையை அரைத்து பாலில் கலந்து சாப்பிட வேண்டும்.

**இருதய நோய்க்கு**

கிராம்பு மரப்பட்டையை உலர வைத்து தூள் செய்து தேன் கலந்து சாப்பிட்டு வர வேண்டும்.

நாட்டு ரக முட்டைக் கோழிகளை கூண்டில் அடைத்து முட்டை விற்பனை செய்கிறார். முட்டை கோழி மினி செட்டை ரூ 55,000 க்கு அரசு திட்டத்தில் பெற்றுள்ளார். இதில் தண்ணீர் நிரப்பினால் கோழிகளுக்கு சிறு டியூப் வழியாக தேவைப்படும் நீரை கோழிகளே உறிஞ்சிக் கொள்ளும்.

**மாடு வயிறு உப்பிசத்திற்கு**

பசு மாடு இரப்பர் பாலை குடித்து விட்டால் வயிறு உப்பிசம் உண்டாகும். இதற்கு தேங்காய் எண்ணெய் 1 லிட்டருடன் இஞ்சி சாறு 1 லிட்டர் சேர்த்து உள்ளே கொடுக்க வேண்டும். பின்னர் மாட்டை வெளியே ஓடச் செய்ய வேண்டும். இதனால் சாணமும், வாயுவும் வெளியேறிவிடும் என்று தனது அனுபவத்தை கூறுகிறார்.

சாந்தகுமாரி
நொய்யதலா
மலிகா, அம்பலவயல், வயநாடு மாவட்டம்
செல் : 9048673352

## வெள்ளனின் பாரம்பரிய வைத்யம்



வெள்ளன் (66) என்பவர் முல்ல குருமா ஆதிவாசி பிரிவைச் சார்ந்தவர். இவர் வயநாடு மலைப்பகுதியில் பாரம்பரிய உணவு, பாரம்பரிய வைத்யம் பார்த்தல் நாட்டு இன வயநாடு குள்ளரகப்பசு, நாட்டு கோழி போன்ற இனங்களைப்பாதுகாத்தல் போன்ற பணிகளை தனது குலத்தொழிலாக கடைபிடித்து வருகிறார். இவர் மூட்டு வலி எண்ணெய் காய்ச்சி மந்திரம் கூறி உடம்புவலி போக்கும் முறையையும் கடைபிடித்து வருகிறார். இவருடைய உத்திகள் பின்வருமாறு.

**மைக்ரேன் என்ற தலைவலிக்கு**

வாதவல்லி இலை, காட்டுமல்லி, நிலநாரிங்கா போன்றவைகளை தேங்காய் எண்ணெயில் காய்ச்சி வைத்துக் கொண்டு தலையில் தடவ வேண்டும். சாப்பாட்டில் உப்பு, புளிப்பு, தயிர், இறைச்சி, முட்டை, மிளகாய்காரம் கூடாது.

**கல்லுப்பிட்டு**

கந்தகசாலை என்ற அரிசி ரகத்தில் வெந்தயம் சேர்த்து அரைத்து புளிக்க விட வேண்டும். மறுநாள் காலையில் தோசைக்கல்லில் தோசை போடுவது போன்று போட்டு மேலே மூடியுடன் மூட வேண்டும்.

**வெண்ணெய்க்கல்லில் அப்பம் சுடுதல்**

காரக்குண்டப்பம் (பணியாரம்)

அரிசிமாவில் நாளிப்பூவன் வாழைப்பழத்தை சுடுநீரில் கலந்து பிசைந்து பணியாரம் செய்வது போன்று சுட வேண்டும்.

**தேங்காய்சாதம்**

கந்தகசாலை அல்லது சீரகசம்பா அல்லது கயமா அரிசியில் தேங்காய்பால் சேர்த்து வெஜிடபிள் பிரியாணி தயாரிப்பது போன்று தயாரிக்கலாம்.

**நிரல் இலா அடை**

காட்டு மரமான நிரல் மரத்தின் இலையில் அடை மாவைத்து கொழுக்கட்டை போன்று வேகவைப்பர். இந்த இலையின் வாசனையில் ருசி கூடும்.

**நாட்டு கோழி வளர்ப்பு**



இவரிடம் 15 நாட்டு கோழிகள் உண்டு. ஒரு தடவைக்கு 12 முட்டைகள் தொடர்ந்து இடும். பின் 3 மாதங்களுக்கு ஒரு முறை முட்டையிடும். கோழிக்கு கொக்கு நோய் வந்தால் குறிஞ்சா செடியை மஞ்சளுடன் சேர்த்து அரைத்து அரிசியில் கலந்து கோழிகளுக்குத் தீனி போட வேண்டும் என்று இவருடைய மனைவி கௌரி கூறுகிறார்.

## மூலிகை தேனீர்

பாரம்பரியமாக குருமா இனமக்கள் மூலிகை செடிகளை கசாயம் செய்து பல வியாதிகளுக்கு தீர்வு காண்பார்கள். இவர் கீழ்கண்ட பல மூலிகை செடிகளை சேர்த்து மூலிகை தேனீர் தயார் செய்து கொடுத்து வருகிறார். இந்த தேனீர் அருந்துவதால் வயிறு உப்பிசம், தூக்கமின்மை, வாயு தெல்லை போன்ற பிரச்சனைகளுக்கு நல்ல பலன் கிடைக்கும்.

சேர்க்கப்படும் மூலிகைகள்:

திப்பிலி, காட்டு சீரகம், எரட்டி மதுரம், சுக்கு, நிலபனை, நிலதேங்காய், நன்னாரி, கருவபட்டை, குருமிளகு, ஏலாம், ஜமூலவேர், கருங்காலிபட்டை, கொத்தமல்லி, வெந்தயம் இவைகளை தேவையான அளவு சேர்த்து நீரில் கொதிக்க விட்டு நாட்டு சர்க்கரை சேர்த்து அருந்த வேண்டும்.

வெள்ளான்
நெல்லர வீடு, நெல்லராச்சால்
அம்பலவயல், வயநாடு மாவட்டம்
கேரளா, செல் : 9847107896

தொகுப்பு : பெ. விவேகானந்தன், சேவா

## மூலிகை மூட்டு வலி எண்ணெய்

மூட்டு தேய்மானம், சுளுக்கு, சதைவலி, தலைவலி, உடம்பு வலி, எலும்பு முறிவு அனைத்திற்கும் நிவாரணம் தரும் எண்ணெய் காய்ச்சி கடந்த 35 வருடங்களாக விநியோகம் செய்கிறார் இராதாகுட்டி கிருஷ்ணா. இவருக்கு 55 வயது வனத்திலிருந்து 5 வகையான மூலிகைச் செடிகளை கொண்டு நல்லெண்ணெயில் காய்ச்சி தயார் செய்கிறார். இந்த எண்ணெயை 3 நாட்கள் தேய்த்து வந்தால் நல்ல நிவாரணம் கிடைக்கிறது. இதனை பாரம்பரியமாக தனது குடும்பத்தில் கடந்த 2 தலைமுறைகளாக கடைபிடிக்கப் படுகிறது. எலும்பு முறிவுக்கு மஞ்சளும், முட்டையும் கொண்டு செல்ல வேண்டும்.

இராதாகுட்டிகிருஷ்ணா
ஹைஸ்கூல் அருகில்,இடுக்கி காலனி
அம்பலவயல், வயநாடு மாவட்டம்
செல்: 9961092480

## இராஜஸ்தான் மாநில கால்நடை வைத்யம்

**குடற்புழுவிற்கு**

விளாம்பழம் மரத்தின் இலைகளை நன்கு அரைத்து 1/2 லிட்டர் தண்ணீருடன் கலந்து 2 நாட்கள் தொடர்ந்து கொடுத்து வர வேண்டும்.

**மலச்சிக்கலுக்கு**

ஆமணக்கு விதைகளை அரைத்து 2 நாட்களுக்கு உள்ளே கொடுக்க வேண்டும். சுக்கு 100 கிராம் தூள் கொடுக்க வேண்டும்.

**அஜீரணத்திற்கு**

கொன்னை மர காய்களை அரைத்து சப்பாத்தியுடன் சேர்த்து கொடுத்தால் ஜீரண சக்தி அதிகரிக்கும். ஒரு நாளைக்கு 2 தடவை கொடுக்க வேண்டும்.

–– கொன்றை மர இலையை கடுகு எண்ணெய்யுடன் சேர்த்து ஒரு நாளைக்கு இரண்டு வேளை வீதம் 5 நாட்கள் கொடுத்து வர வேண்டும்.

**மாடுகளின் கழிச்சலுக்கு**

–– காய்ந்த நொச்சிதலையை தீவனத்துடன் கலந்து ஒரு வாரம் கொடுக்க வேண்டும்.

––வெந்தய இலையை ஒரு கிலோ தீவனமாக கொடுத்து வர வேண்டும்.

**மூட்டு வலிக்கு**

சதாவரி வேர் தூள் 50 கிராம் அரைத்து பாலுடன் சேர்த்து ஒரு மாதம் கொடுத்தால் மூட்டு வலி குணமாகும்.

**பருவத்திற்கு வராத மாட்டிற்கு**

இரண்டு ஊமத்தங்காயை சோள ரொட்டியுடன் மடித்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**வயிறு உப்பிசத்திற்கு**

ஆலமர பட்டை 100 கிராம், ஓமம் 10 கிராம் வெங்காயம் 2, சேர்த்து அரைத்து உருண்டையாக உள்ளே கொடுக்க வேண்டும்.

**மாட்டு வாத நோய்க்கு**

பிரம்மதண்டு குடியோட்டி இலை 100 கிராம், பழம் 100 கிராம் அரைத்து வரும் சாற்றினை எடுத்து கால் மற்றும் உடல் முழுவதும் தேய்க்க வேண்டும்.

**மாடு சுகப்பிரசவம் பெற**

––எருக்கு பூ 50 கிராம் அரைத்து இத்துடன் வெல்லம் 100 கிராம் சேர்த்து உள்ளே தர வேண்டும்.

––முளை கட்டிய வெந்தயம் 100 கிராம் தினமும் ஒரு வேளை வீதம் ஒரு மாதம் கொடுத்து வர வேண்டும்.

**விஷக்கடிக்கு**

எருக்கு இலை பாலை பாம்பு கடித்த இடத்தில் தடவி வர வேண்டும்.

**கறவையைக் கூட்ட**

––அருகம்புல் ஒரு கட்டு தினந்தோறும் தீவனமாக கொடுத்து வந்தால் பால் அடர்த்தியாகவும் அதிகமாகவும் தரும்.

––அரிசி, உளுந்து, உப்பு, மிளகு ஆகியவற்றை சேர்த்து வேகவைத்து தினமும் ஒன்று அல்லது இரண்டு வேளை வீதம் ஒரு மாதம் கொடுத்து வர வேண்டும்.

**கண்ணில் வெள்ளை விழுந்தால்**

ஒரு தேக்கரண்டி அளவுள்ள அருகம்புல் சாறு கண்ணில் விட வேண்டும். இதை காலை நேரத்தில் 3 நாட்கள் தொடர்ந்து ஊற்ற வேண்டும்.

**இரத்த போக்கு குணமாக**

சிசு மரத்து இலை 100 கிராம் எடுத்து அரைத்து தினமும் 2 வேளை வீதம் ஒரு வாரம் கொடுத்து வர வேண்டும்.

**மஞ்சள் காமாலை நோய்க்கு**

கருவேல மரத்தின் பூவை 250 கிராம் அளவுக்கு எடுத்து நன்கு அரைத்து அதனை 250 மி.லி தண்ணீரில் சேர்த்து 15 நாட்களுக்கு கொடுத்து வர வேண்டும்.

**வெப்பத்தினால் தோல் வெடிப்பு ஏற்பட்டால்**

வில்வமர இலை 500 கிராம் அரைத்து அதனை விளக்கெண்ணை 100 மி.லி சேர்த்து பாதிக்கப்பட்ட இடத்தில் தடவி வர வேண்டும்.

**பேன், உன்னிகளுக்கு**

தேவையான அளவு வெங்காயத்தை அரைத்து கடுகு எண்ணெய் 100 மி.லியுடன் அதனை வாழை இலை சாம்பலுடன் சேர்த்து உடம்பில் தடவி வர வேண்டும்.

**செருமலுக்கு**

வெங்காயத்தை அரைத்து கடுகு எண்ணெய் 100 மி.லியுடன் சேர்த்து ஒரு நாளைக்கு மூன்று வேளைகள் வீதம் ஒரு மாதம் உள்ளே கொடுத்து வர வேண்டும்.

**வேதனையால் துடித்தால்**

வெந்தயத்தை 25–30 கிராம் தூளாக்கி தினமும் இரண்டு வேளை வீதம் 5–7 நாட்களுக்கு கொடுத்து வர வேண்டும்.

**கால்நடைகளுக்கு மூட்டு வலி குணமாக**

தண்ணீர்விட்டான் கிழங்கு 250 கிராம் அரைத்து பாலுடன் சேர்த்து ஒரு மாதம் கொடுத்து வர வேண்டும்.

நன்றி : பசுதான் (டிசம்பர் 2016).

## மருத்துவரில்லா மாட்டுப்பண்ணை

கால்நடைகளை நன்கு பராமரிப்பு செய்தாலே நோய் பிரச்சனைகள் இல்லை. இக்காரணத்தால் கால்நடை மருத்துவரை அழைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படாது என்று அன்னபூர்ணா மாட்டுப்பண்ணையை நிர்வாகித்து வரும் தாமஸ் கூறுகிறார். கடந்த 30 ஆண்டுகளாக இங்குள்ள பசுமாடுகளை பராமரிப்பு செய்து வருகிறார். இந்த பண்ணையில் 30 கிர் மாடுகளும் சில கலப்பின மாடுகளும் உள்ளன. இந்தப்பண்ணைக்கு சொந்தமாக 135 ஏக்கர் நிலம் உள்ளது. இங்கு நெல், தீவனப்பயிர், சூபாபுல், கிளிரிசிடியா போன்றன சாகுபடி செய்யப்படுகின்றன. மாடுகளுக்கு பச்சைபுல், பயறு வகை தீவனப்புல், மரத்தழை அதிகமாகவும் உலர் தீவனம் (வைக்கோல், காய்ந்ததட்டை) மிகக்குறைந்தளவும், தவிடு, பிண்ணாக்கு மிகமிகக் குறைந்தளவும் பயன்படுத்தப்படுகிறது. மாடுகளுக்குத் தேவையான அடர்தீவனத்தை வெளியே வாங்காமல் தாங்களாகவே கம்பு, தினை, மக்காச்சோளம் போன்ற சிறு

தானியங்களை சேர்த்து மிகக் குறைவாக தவிடும், பிண்ணாக்கும் பயன்படுத்துகின்றனர். பிண்ணாக்கு அதிகமாகும் சமயம் கல்லீரலைப் பாதிக்கும். பசுக்களுக்கு அதிகாலையிலிருந்து மாலை வரை தொடர்ந்து பசுந்தீவனப்புல் அளித்தல், மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லுதல் இங்கு நடைபெறுகிறது. மாடு கொட்டகை குளிர்ச்சியாக இருக்க கூரை போடப்பட்டு தரையானது வழுவழுப்பாக இல்லாமல் கிரிப் (Grip) கிடைக்க தரையில் கோடுகள் போடப்பட்டு சொர சொரப்பாக உள்ளது. மாடுகள் படுக்க இரப்பர் மேட் உள்ளதால் ஈரம் தாக்காது. சிறு நீர் வடிந்து வாய்க்காலில் சென்று தொட்டிக்கும் போய் பின்னர் நீர் பாய்ச்சும் வாய்கால் நீருடன் கலந்து வயலுக்கு உரமாகப் போய் சேர்ந்துவிடும்.

ஆரம்பத்தில் இங்கு கிடைத்த நாட்டு மாடுகளை வைத்து பண்ணையை ஆரம்பித்தோம். பால் அளவைக்கூட்ட ஜெர்சி மாட்டு காளையை வைத்து இனப்பெருக்கம் செய்தோம். சில தலைமுறைகளில் பாலின் அளவு கூடியது. மாடுகளுக்கு ஆரோக்கியமும் வலிமையும் கூட்ட நாட்டு மாடு காளையை வைத்து இனப்பெருக்கம் செய்ய கிர் காளையைக் கொண்டு வந்தோம். இதனால் நாட்டு மாட்டு இரத்தம் கூடி ஆரோக்கியம் கூடியது. நல்ல தாய்பசுக்களை மட்டும் தேர்வு செய்து அதன் கன்றுகளை இனப்பெருக்கம் செய்ய வைத்துக் கொண்டு பால் குறைவாயுள்ள தாய்பசுக்களையும், முரண்டு செய்யும் குணமுள்ள பசுக்களையும் கழித்து விட்டோம். இதனால் இங்குள்ள மாடுகள் நல்ல குணாதீசயங்களுடன், பால் அளவு கூடியும் உள்ளன.

நெல் அறுவடைக்குப்பின் நரிப்பயறு விதைத்து வளரவும் மேய்ச்சலுக்கு விட்டு விடுவோம். இது தவிர தீவனப்புல் வளர்க்கின்றோம். சில மாடுகள் வாழ்நாளில் 50,000 லிட்டர் பால் தருகின்றன. அதாவது சராசரி நித்தமும் 15 லிட்டர் தரும். கன்றுகளுக்கு நித்தமும் காலை 2 லிட்டர் பாலும் மாலை 2 லிட்டர் பாலும் கொடுத்து முதல் 100 நாட்களுக்கு இங்ஙனம் 4 லிட்டர் கொடுத்து வளர்ப்பதால் நல்ல திடகாத்திரத்துடன், ஆரோக்கியத்துடன் கிடாரிகள் உருவாகும். 21/2 –3 வருடங்களில் காளைக்கு சேர்ப்போம். கறவை மாடுகள் கன்றுகள் ஈன்ற 3 மாதத்தில் காளைக்கு சேர்ப்பித்து அடுத்த 7 மாதங்கள் வரை பால்கறவை செய்யலாம். பின்னர் 2 மாதங்கள் ஓய்வு (கறவை கூடாது). இப்படி அவகாசம் கொடுப்பதால் பசுமாடுகள் நல்ல ஆரோக்கியத்துடன் திகழும். பால்கறவை 5–7 ஈத்துகளில் கூடி வரும். ஒரு மாட்டிற்கு குறைந்தது 6’x 8’ பரப்பளவு இடம் கொட்டகையிலிருக்க வேண்டும். பாலை நாங்களே விற்பனை செய்கிறோம். மீதப்படும் பாலை தயிராகவும், பன்னீர், பாலாடை கட்டியாகவும் தயாரித்து வருகிறோம். மேலும் விவரங்களுக்கு : திரு. தாமஸ், அன்னபூரணா

ஆரோவில், பாண்டிசேரி, செல்: 9489693801

## வண்டிப்பாளையம் சீனிவாசனின் கால்நடை வைத்யம்



திரு. சீனிவாசன் விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அருகே உள்ள வண்டிப்பாளையம் கிராமத்தில் கடந்த 50 ஆண்டுகளாக மாடுகளுக்கும், ஆடுகளுக்கும் வைத்தியம் செய்து வருகிறார். சீனிவாசனின் வைத்தியம் ஏற்கனவே (ஏப்ரல்– ஜுன் –2015 ) இதழில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் சில வைத்திய முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### ஆட்டுக்கு வரும் துள்ளுமாறி நோய்க்கு

ஆட்டுக்கு ஜன்னி மாதிரி வந்து சுத்தி சுத்தி விழுந்து 2 நாட்களில் இறந்துவிடும். இந்த நோய் வெள்ளாடுகளுக்கு மழை காலத்தில் வரும். இதற்கு நல்லெண்ணெயில் மஞ்சள் தூள் கலந்து காய்ச்ச வேண்டும். ஒரு கரண்டியில் சூடாக எடுத்து கொம்பின் இரு பகுதிகளுக்கும் நடுவில் தடவ வேண்டும். பின்னர் சாம்பிராணி புகை காட்ட வேண்டும்.

### ஆடு கழிச்சலுக்கு

சுக்கு, மிளகு, மஞ்சள்தூள் ஒவ்வொன்றும் 10 கிராம் எடுத்து அரைத்து உள்ளே தர வேண்டும்.

### மாடு சுண்டு வாதத்திற்கு

மஞ்சள், சுக்கு, வெள்ளைப்பூண்டு, வெல்லம் ஒவ்வொன்றும் 10 கிராம் எடுத்து அரைத்து கஞ்சித்தண்ணீரில் (ஆறியது) கலந்து உள்ளே தர வேண்டும்.

**மாடு கழிச்சலுக்கு**

விலாரி தழை 100 கிராம், மஞ்சள் 10 கிராம் சேர்த்து அரைத்து சாதம் வடித்த கஞ்சியில் கலந்து தர வேண்டும்.

**எலும்பு முறிவுக்கு**

எலும்பொட்டி தழையை பாலில் அரைத்து உளுந்துமாவு, முட்டை வெள்ளை கருவுடன், கலந்து காடா துணியில் துவைத்து அடிபட்ட இடத்தில் எலும்பை ஒன்று சேர்த்து சுத்த வேண்டும். இதன் மேல் மூங்கில் தப்பை வைத்து பின்னர் மறுகட்டு போட வேண்டும். ஒரு வாரம் கழித்து அவிழ்த்து புது கட்டு போட வேண்டும். இதே போல் 3 முறை செய்து வர வேண்டும்.

**மடி நோய்க்கு**

வேப்ப எண்ணெய் 250 மி.லி எடுத்து 5 எலுமிச்சம்பழம் பிழிந்து சாறு விட வேண்டும். இதில் மஞ்சள்தூள் 50 கிராம் கட்டி கற்பூரம் 10 கிராம் தூள் செய்து சேர்க்க வேண்டும். பின்னர் நாமக்கட்டியை தூள் செய்து சாயங்காலம் 6 மணிக்கு மேல் மடியில் தடவ வேண்டும். பகலில் தேய்த்தால் மாடு நக்கி விடும். இதனை 3 நாட்கள் தொடர்ந்து செய்து வர வேண்டும்.

குறிப்பு :

சீனிவாசன்
வண்டிப்பாளையம்
மரக்காணம் வழி
விழுப்புரம் மாவட்டம்

## கால்நடை வைத்திய பயிற்சி முகாம்

(அட்டை பட பயிற்சி விளக்கம்)

மூன்று நாட்கள் கால்நடை வைத்திய பயிற்சி முகாம் ஆரோவில் எஸ்.எல்.ஐ நிறுவனத்துடன் இணைந்து கோட்டகல்லில் நடைபெற்றது. இப்பயிற்சிக்கு விழுப்புரம், கடலூர், நாகப்பட்டிணம், திருவாரூர் போன்ற மாவட்டங்களிலிருந்து 24 நபர்கள் கலந்து கொண்டனர். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் மகளிர் குழு உறுப்பினர்கள், பஞ்சாயத்து மூலம் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கு நடுகுப்பம் பிச்சையாண்டிகுளம் பாரஸ்ட் மையத்திலும், ஆரோவில் அன்னபூரணா பண்ணை யிலும், பூர்வீகம் மூலிகை பண்ணையிலும் கால்நடை பராமரிப்பு, கால்நடை வைத்தியம், மூலிகை செடிகளை அடையாளம் பார்த்தல் போன்றவற்றில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

இதில் கலந்து கொண்டோர் 3 பிரிவுகளாக பிரிந்து மசால் உருண்டை தயார் செய்தல், மத்தான் தைலம் காய்ச்சுதல், குடற்புழு நீக்க மருந்து தயாரித்தலில் பங்கு கொண்டனர்.

மூலிகை மருந்து தயாரிப்பு விவரம் பின்வருமாறு:

**1) மசால் உருண்டை தயார் செய்தல்** (வயிறு சம்மந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு)



சிறுதும்பை, குப்பைமேனி, வீலி, உசிலை, துளசி, ஆவாரம்பூ, விராலி, மூங்கில்இலை, துத்தி, கொளுஞ்சி, முடக்கத்தான், நிலவேம்பு, கொய்யா கொழுந்து இலை, வெற்றிலை, பிரண்டை ஒவ்வொன்றும் 100 கிராம், சோற்று கற்றாழை 1/4 கிலோ, சிறுவெங்காயம் 1/4 கிலோ, ஒரு தேங்காய் துருவல், வெள்ளை பூண்டு 100 கிராம், கொல்லங்கோவை கிழங்கு 100 கிராம், வெல்லம் 500 கிராம் இவைகளை அரைத்து உருண்டையாக பிடித்து மஞ்சள் தூளில் உருட்டி எடுக்க வேண்டும். மாட்டிற்கு 1 உருண்டை போட வேண்டும். கன்று, ஆடுகளுக்கு பாதி அளவு போட்டால் போதும். இதனால் வயிறு உப்பிசம், அஜீரணம், தீனி திண்ணாமை ஆகியவற்றிற்கு நிவாரணம் கிடைக்கும். இது தவிர வயிற்றுக் கிருமி, கோமாரி நோய், மடிநோய் ஆகியவற்றிற்கு வரும் முன் காப்பு மருந்தாக செயல்படும். மசால் உருண்டை போட்ட பின் உப்பு, புளி கலந்து நாக்கின் மீது தேய்த்து விட வேண்டும்.

**2) மத்தான் தைலம் தயார் செய்தல்** (ஆறாத, புழு வைத்த புண்களுக்கு)



மத்தான் தைலம் தயார் செய்து புண்களில் தடவி வரலாம். மத்தான் தைலம் தயாரிக்க 500 மி.லி தேங்காய் எண்ணெயில் 500 மி.லி ஊமத்தை இலை சாறு விட்டு சுமார் 1–2 மணி நேரம் பதம் வரும் வரை காய்ச்ச வேண்டும். காய்ச்சி இறக்கிய பின் 5 கிராம் மயில் துத்தம் சேர்த்து கிண்ட வேண்டும். இதனை பாட்டிலில் ஊற்றி வைத்து கொண்டு தேவைப்படும் போது புண்கள், தோல் பத்து போன்றவற்றிற்கு உபயோகப்படுத்தலாம்.

**3) குடற்புழு நீக்க மருந்து தயார் செய்தல்**



சோற்றுக்கற்றாழை, நொச்சிதழை, ஆடாதொடை அல்லது பீநாரிசங்கு, எருக்கழை, வேப்பங்கொட்டை ஒவ்வொன்றும் 1 கிலோ அளவு எடுத்து இடித்து பின்னர் மிக்சியில் போட்டு அரைக்க வேண்டும். இதை வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டும். இதிலிருந்து 50 மி.லி மாட்டுக்கும், 20–25 மி.லி. கன்றுகள் அல்லது ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தாகக் கொடுக்கலாம். இதனை 2–3 மாதங்களுக்கு ஒரு முறை கொடுத்து வர வேண்டும். மேற்படி தழைகளை இடித்து இத்துடன் மாட்டு கோமியம் 1 லிட்டர் கலந்து பின்னர் 10 லிட்டர் நீர் சேர்த்து ஒரு பாத்திரத்தில் ஊற வைக்க வேண்டும். இதனை 40 நாட்கள் அப்படியே விட்டு விட வேண்டும். பின்னர் வடிகட்டிய கரைசலுடன் 10 மடங்கு நீர் சேர்த்து பயிருக்கு பூச்சி மருந்தாக தெளிக்கலாம்.

தொகுப்பு : பெ. விவேகானந்தன், சேவா

# வாசகர் வட்டம்

## செந்நெல் ரகம்

பருவம் 26 இதழ் 1 ஏப்ரல் – ஜூன் 16, இதழ் பக்கம் 10 ல் செந்நெல் பக்கம் 20ல் ஒடிஸா கோரக்பூர்மலை ஜாதி மக்கள் நெல் சாகுபடி பற்றிய குறிப்புகள் வந்துள்ளதை படித்து பார்த்து விட்டு இந்த கடிதத்தை எழுதுகிறேன். இத்துடன் செந்நெல் விதை தேவைக்காக சில இடங்களுக்கு நான் அனுப்பி வைத்த கடிதத்தின் நகலையும் இணைத்துள்ளேன். நம் வழி வேளாண்மை ஜனவரி– மார்ச் 2016 இதழ் பக்கம் 8 ல் டி.ஆர்.கே என்ற புதிய ரக நெல்லை வாங்கி கொடுத்து அறிமுகம் செய்துள்ளீர்கள். செந்நெல் விதையையும் நீங்கள் முயற்சி செய்தால் தமிழகம் வர ஆவன செய்யும் படி கேட்டு கொள்கிறேன். இயற்கை பாரம்பரியத்தை விரும்பும் நான் ஒரு இயற்கை விவசாயி சங்க இலக்கியத்தில் சொல்லப்பட்ட ''செந்நெல்'' இன்று தமிழ் மண்ணில் இல்லை. ஆனால் ஒடிசா மாநிலத்தில் கோரக்பூர் மலைவாழ் மக்களிடம் உள்ளதாக எழுத்தாளர் திரு.எஸ். ராமகிருஷ்ணன் பதிவு செய்துள்ளார்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த வைஷ்ணவ குரு ஸ்ரீ ராமானுஜர் வாழ்க்கை சரிதத்தில் ''செந்நெல்'' அரிசியில் தளிகை செய்து பெருமாளுக்கு நெய்வேத்தியம் செய்ததாக வரலாறு கூறுகிறது.

திருஞானசம்பந்தர் அருளிய கோளறு பதிகத்தில் 11 வது பாடலில், தேனமர் பொழில் கொளாலை விளை ''செந்நெல்'' என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வளவு சிறப்பு மிக்கதாக கூறப்பட்டுள்ள ''செந்நெல்'' இன்று தமிழகத்தில் கண்ணுக்குத் தெரியவில்லை. ஒரு பிடி விதை நெல் கிடைத்தால் கூட அதை வைத்து எவ்வளவோ சாதிக்கலாம்.

கே. நடராஜன்
181, இராஜவீதி
செங்கம் – 606701, திருவண்ணாமலை மாவட்டம்
செல் : 9487627839

## நிற்காத கழிச்சலுக்கு

ஒடிஸ்ஸாவில் அன்குள் மாவட்டத்தில் துள்சிபால் கிராமத்தில் சாநாதன் சாஹு என்ற விவசாயி தனது மாட்டிற்கு தொடர்ந்து கழிச்சலிருந்து வருவதாகக் கூறினார். இதற்கு ஆங்கிலவைத்யம் செய்தும் குணமாகவில்லை என்று கூறினார். இதற்கு கீழ்கண்ட மருந்தை தயார் செய்து கொடுக்குமாறு கூறினேன். பின்னர் சில நாட்களில் குணமானதாகக் கூறினார்.
கடுக்காய் பவுடர் 100 கிராம், தயிருடன் கலந்து கொடுக்க வேண்டும்.
டாக்டர். பலராம்சாகு, புவனேஸ்வர்

## மாடு விஷப்பொருட்களை சாப்பிட்டால்

பச்சரிசி 200 கிராம், தேங்காய் துருவல் (ஒருமுடி), நீர் சேர்த்து கஞ்சி மாதிரி கொதிக்க விட வேண்டும். பின்னர் மாட்டிற்கு உள்ளே அருந்த தர வேண்டும்.
அன்னக்குட்டி ஜோசப்
இடுக்கி, கேரளா

## மலைவேம்பு நாற்றுக்கள் வாங்க

நல்ல தரமான மலைவேம்பு கன்றுகள் (சி.கே.10 ரகம்) எங்கள் பண்ணையில் உற்பத்தி செய்து கொடுக்கிறோம். கன்று விலை ரூ. 8/–. அதிக எண்ணிக்கையில் வாங்குபவர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடு செய்து தரப்படும்.
கருணாநிதி
குணா நர்சரி கார்டன், விஜய் தியேட்டர் அருகில்
பெருந்தலையூர், பவான தாலுகா
ஈரோடு மாவட்டம் , செல் : 9842819224

## மாடு பருவத்திற்கு வர

மஞ்சள், வெந்தயம், சீரகம், பூண்டு, உப்பு ஒவ்வொன்றும் 10 கிராம், பனங்கற்கண்டு 50 கிராம், தேங்காய் 1/2 முடி எடுத்துக் கொள்ள வேண்டும்.
கண்டங்கத்தரி, சோற்றுக்கற்றாழை, துளசி, துத்தி, பிரண்டை, விராலி, தும்பை, தொட்டாற்சிணுங்கி, வேப்ப இலை, கீழா நெல்லி தேவையான அளவு எடுத்து அனைத்தையும் மசால் உருண்டை தயாரிப்பது போன்று அரைத்து சேர்க்கவேண்டும். இதனை கோமாரி நோய் வரும் முன்னர் கொடுத்தால் நோய் தாக்காது.
கே. கண்ணப்பன்
த/பெ. கலியமூர்த்தி
தேசிங்கன், ஆத்தூர் அஞ்சல், மயிலாடு துறை தாலுகா
நாகப்பட்டிணம் மாவட்டம் , செல்: 9942647960

## மாட்டிற்கு ஜூரம் வந்தால்

ஒரு தடவை இரவு மாட்டிற்கு ஜூரம் கூடிவிட்டது. உடனே டாக்டரை அழைக்க இயலவில்லை. இதற்கு வேப்பம்பட்டை 100 கிராம், வேப்பங்கொட்டை தூள் 50 கிராம், பழைய பாய் தூள் (கிழிந்த பாய்) சேர்த்து புகை முட்டம் செய்து மாட்டிற்கு முகப்பகுதியில் படும்படி காட்டினேன். பின்னர் பச்சை அரிசியில் சீரகம் சேர்த்து கஞ்சி வைத்து கொடுத்தேன். பின் மாடு குணமாகி விட்டது.
சி. ஜோதி
கே. சின்னப்பா
கண்டமங்கலம், பிள்ளையார் கோயில் தெரு
காட்டு மன்னார் கோவில் அஞ்சல்
கடலூர் மாவட்டம்
செல்: 7094585961

## நாய் கடிக்கு

கீழாநெல்லி சமூலம் 50 கிராம் எடுத்து 100 மி.லி நல்லஎண்ணெயில் காய்ச்சி சற்று ஆறியவுடன் கடித்த இடத்தில் சாணியை கொழப்பி வட்டமாக பாத்திகட்டி ஊற்ற வேண்டும். சிறிது நேரம் வடியாமல் வைத்திருக்க வேண்டும்.

## மஞ்சள் காமாலைக்கு

கீழாநெல்லி கைப்பிடி எடுத்து சீரகம் (50 கிராம்) சேர்த்து அம்மியில் அரைத்து 1/2 லிட்டர் பாலுடன் கலந்து உள்ளே சாப்பிட வேண்டும். 100 மி.லி பால் கரைசலை தலையில் உடம்பில் தேய்த்து குளிக்க வேண்டும். 3 நாள் உப்பு இல்லாத சாப்பாடு சாப்பிட வேண்டும். பத்தியம் முறிக்க 1 கத்திரி, 1 ஓமம், உப்பு சேர்த்து சாப்பிட வேண்டும்.
இளநீரை 5 நாள் குடித்து வர வேண்டும். 10–20 நாள் தொடர்ந்து இளநீர் சாப்பிட முழு நிவாரணம் கிடைக்கும்.
ஆர். லதா
காமராஜ் தெரு, கீழக்கடம்பூர், மேலகடம்பூர் அஞ்சல்,
காட்டுமன்னார்கோவில் தாலுகா,கடலூர் மாவட்டம்
செல்: 9585113105

## நெல்லுக்கு இயற்கை வேளாண்மை

"ஆதிரா" என்ற நாட்டுரக நெல்லை பயிர் செய்து வருகிறேன். இது சிவப்பு நிற நெல். இதன் வயது 120 நாட்கள். இந்த நெல்லுக்கு சணப்பு விதைத்து பயிர் முளைத்த 45 நாட்களில் உழுது விடுவேன். பின்னர் ஆதிரா விதைப்பு செய்வோம். எந்த உரமும், மருந்தும் தெளிப்பதில்லை. இங்கு கூலியாட்களுக்கு சம்பளம் ரூ.500 ம் சாப்பாடும் தர வேண்டும். இதனால் கூடிய வரை இயற்கை வழியில் வேலைகளைக் குறைத்து வரும் சொற்ப வருமானத்தை மட்டும் வைத்துக் கொள்கிறோம். நெல்லுக்கு முன் ஏப்ரல் மாதத்தில் இஞ்சி சாகுபடி செய்து வருகிறேன். இஞ்சி அறுவடைக்குப்பின் செப்டம்பரில் நெல் சாகுபடி துவங்கும். ஆதிரா என்ற நெல் ஏக்கருக்கு 10 குவிண்டால் விளைச்சல் தரும். இதனை அரிசியாக்கி கிலோ ரூ. 45 க்கு கொடுக்கிறோம். நாங்கள் பாரம்பரிய ரொபஸ்டா காபி செடியை நட்டு கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நல்ல மகசூல் பெற்று வருகிறோம்.

வி.கே. கங்காதரன்
கொச்சன் கோடு , அம்பலவயல், வயநாடு, கேரளா
தொலைபேசி: 04936– 260271

## பள்ளி மாணவர்களுக்கான அப்துல்கலாம் இக்னைட் பரிசு 2016

ஒவ்வொரு ஆண்டும் பள்ளி மாணவர்களுக்கான அப்துல்கலாம் இக்னைட் பரிசு சேசிய கண்டுப்பிடிப்பாளர் அறக்கட்டளையின் மூலம் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு நவம்பர் மாதம் 7 ம் தேதி அன்று டெல்லியில் இராஷ்ட்ரபதி பவனில் ஜனாதிபதி மூலம் பரிசுகள் 31 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. முன்னதாக நாடு முழுவதிலிருந்தும் பெறப்பட்ட 55,000 நுழைவு மனுக்களில் 31 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். புதிய ஆலோசனைகளையும் கண்டுபிடிப்புகளையும் உருவாக்கும் மாணவர்கள் சமுதாயத்தின் நாற்றங்காலுக்கு ஒப்பிடலாம். இந்த மாணவர்கள் பிற்காலங்களில் சிறந்த தலைவர்களாக உருவாக கல்வி கூடங்கள் இவர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் அளிக்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும் என்று தனது உரையில். மாண்புமிகு பிராணப்முகர்ஜி அவர்கள் கூறினார்கள். தற்பொழுது நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு பொறுமையாக பார்த்து கொண்டு இருக்க முடியாது. எனவே கீழ்கண்ட தாரக மந்திரமே நமக்கு தேவை: "துரிது செயல்படு, கண்டுபிடிப்போடு செயல்படு, அரவனைத்து செயல்படு (Impatient India. Innovative India, Inclusive India)".

### கண்டுபிடிப்பு விவரங்கள்:

### இரு சக்கர வாகனங்களில் பொருத்தப்படும் அவசரகால விளக்கு



பிரனாவ் மற்றும் காயத்ரி இருவரும் உடன் பிறந்தவர்கள். கேரளாவில் கொச்சியில் பள்ளியில் படித்து வருகின்றனர். அவர்கள் சிறு வயது முதலே இரு சக்கர வாகனங்களினால் ஏற்படும் விபத்துகள் பற்றிய நிறைய கதைகளை கேள்வியுற்றிருந்தனர். இதன் மூலம் சரியான பாதையில் நாம் செய்யும் சிறு பிழை கூட மிகப்பெரிய விபத்தை ஏற்படுத்தும் என்று அறிந்து கொண்டனர். அவர்கள் இருவரும் ஒவ்வொரு முறை இருசக்கர வாகனத்தில் செல்லும் போது அவர்களது தாயாரும் இதனைக் குறித்து கவலையுற்றிருந்தார். விபத்துக்கு முக்கிய காரணமே தற்செயலாக நடக்கக்கூடிய சிறு சிறு தவறுகள் தான். அதிகமான வேகத்தினாலோ, மோசமான வானிலையாலோ, குறைவான வெளிச்சத்தினாலோ விபத்துகள் நடை பெற வாய்ப்புகள் உள்ளன.

விபத்துகளை குறைக்க பிரனாவ் மற்றும் காயத்ரிக்கு ஒரு யோசனை தோன்றியது. இரு சக்கர வாகனத்துடன் அவசர கால விளக்கு அல்லது எச்சரிக்கை ஒலியெழுப்பும் கருவியை இணைப்பதன் மூலம் விபத்துக்களை தவிர்க்கலாம். இது இஞ்சின் இயக்க நிலையில் உள்ள போதும் அணைத்து வைக்கப்பட்டிருக்கும் போதும் செயல்படுமாறு அமைக்க வேண்டும். ஏற்கனவே விபத்துக்குள்ளான இடத்தில் எதிர் வரும் வாகனங்களின் மூலம் மேலும் ஒரு விபத்து நிகழ்வதைத் தவிர்க்கலாம். பிரனாவிற்கு இயந்திர பொறியாள ராகவும், காயத்ரிக்கு இசைக்கலைஞராகவும் ஆக வேண்டும் என்ற ஆசை உள்ளது.

**உணவு உண்ணுவதற்கு முன்பும் பின்பும் கைகழுவுவதை நினைவுறுத்த**



பொதுவாக குழந்தைகள் உணவு உண்பதற்கு முன்பும், பின்பும் கைகழுவுவதை மறந்து விடுகின்றனர். இக்குழந்தைகளின் உடல் நலம் பாதிப்படைந்து நோயினை உண்டாக்கும். 2016 ல் ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற கண்டுபிடிப்புகளின் திருவிழாவில் (Festival of Innovation) போது "சிருஷ்டி" நடத்திய குழந்தைகளின் உருவாக்கும் திறனை அதிகரிக்கும் கூட்டத்தில் ஷிரன் (டெல்லியில் பள்ளிக்கூட மாணவி) தனது யோசனையைக் கூறினாள். அவளது யோசனையானது டிபன் பாக்ஸ் மூடியின் மேல் பக்கத்திலும் பாத்திரத்தின் உள்ளும் "கைகளை கழுவவும்" என்ற வாசகத்தை அச்சடிப்பதன் மூலம் குழந்தைகளுக்கு கை கழுவும் பழக்கத்தை நினைவுறுத்தலாம். ஷீரனது விருப்பம் தான் சிறந்த பொறியாளர் ஆக வேண்டும் என்பது அவளுக்கு பாடுவதிலும் நடனம் ஆடுவதிலும், பயணம் செய்வதிலும் ஆர்வம் அதிகம்.

**கண்காணிப்பு கருவியை வாகனத்தில் பொருத்துதல்**

அர்ஜிதா பத்திரா ஒரிஸ்ஸாவில் அன்குல் ஊரில் 8 ஆம் வகுப்பு படித்து வருகிறார். டிசம்பர் 2012ல் நடந்த நிர்பயாவின் பலாத்கார நிகழ்வு அர்ஜிதாவை மிகவும் பாதிப்புக்குள்ளாகியது. இதனால் ஒரு எச்சரிக்கை கருவியை வாகனத்தில் பொருத்தி பெண்களை ஆபத்திலிருந்து காக்கும் யோசனையை கூறினாள். சுமார் ஒரு கிலோ மீட்டர் பெண்கள் யாரேனும் ஆபத்திலிருந்தால் கணினி மூலம் காவல்துறைக்கு தகவலை அனுப்பும். அன்றாடம் அதிகளவில் பலாத்காரம், திருட்டு மற்றும் பல குற்றங்கள் மூடிய வாகனத்தில் நடைபெறுவதை கேள்வியுற்றாள்.



இவ்வாறு செய்பவர்களுக்கு இச்சாதனத்தின் மூலம் ஒரு பாடத்தை கற்பிக்க நினைத்தாள். முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்று நினைத்து செயல்பட துணிந்தாள். அவளது இலட்சியமே ஒரு சிறந்த விஞ்ஞானியாக வர வேண்டும் என்பதே.

**நாற்புறமும் காற்றுவரும் குளிர்விப்பான்**



முஸ்கன் ஜவல்கார் மத்தியபிரேதேசத்தில் ஹஸ்கன்பாத் ஊரில் 8ஆம் வகுப்பு படித்து வருகிறார். கோடைகாலத்தில், ஒரு நாள் முஸ்கன் ஜவல்கார் குடும்பத்தில் அனைவரும் ஓர் அறையில் அமர்ந்திருந்தனர். ஆனால் அனைவராலும் குளிர்விப்பான் சாதனம் மூலம் குளிர்ந்த காற்றை பெற இயலவில்லை. இதனை தீர்க்க வேறு ஒரு யோசனை அவள் கண்டறிந்தாள். அனைத்து திசைகளிலும் குளிர்ந்த காற்றை பரப்ப மாற்று குளிர்விப்பான் கிடைமட்டத்தில் வட்டமாக சுற்றும் யோசனையை தெரிவித்தாள். இதனால் அனைவருக்கும் சீராக குளிர்ந்த காற்று கிடைக்கும். அவளுக்கு டாக்டர். ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் மீது ஈடுபாடு அதிகம்.

நன்றி : தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை nif.org.in

புதிய யோசனைகளை தெரிவிக்க அனுக வேண்டிய மின்னஞ்சல்: ignite@nifindia.org